வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959    Reg. No. : P. 1632    விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu





Email : eelanaduweekly@gmail.com    மலர் : 06    05.03.2025 புதன்கிழமை    இதழ் : 64    பக்கங்கள் : 12

# நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப இதுவே மிகச் சரியான தருணம்!

## இலங்கை அரசை வலியுறுத்தினார் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர்

ஜெனிவா, மார்ச் 05

**இலங்கையில் நீண்ட காலமாக நிலவிவரும் தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும், இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் இதுவே சரியான தருணம் எனச் சுட்டிக்காட்டிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க், அரசாங்கத்தினால் பிரேரிக்கப்பட்டுள்ள உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு செயன்முறை குறித்து தமது வரவேற்பை வெளியிட்டார்.**



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் கடந்த மாதம் 24ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது. இக் கூட்டத்தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இலங்கை நேரப்படி பி.ப 2.00 மணிக்கு ஆரம்பமான அமர்வில், "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்" எனும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் அதன் சமகால நிலைவரம் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க்கின் வாய்மொழிமூல அறிக்கை பேரவைத் தலைவரால் வாசிக்கப்பட்டது.

அதன்படி இலங்கையில் கடந்த ஆண்டு நடைபெற்று முடிந்த பொதுத்

11

## கூட்டணியுடன் கூட்டு வைக்க தமிழரசுக்கு அவசியமில்லை!

### கூட்டமைப்பாக செயல்படத் தயார் சித்தார்த்தனுக்கு சிவஞானம் பதில்

யாழ்ப்பாணம், மார்ச் 05



கூட்டணியுடன் கூட்டு வைக்க வேண்டிய தேவை தமிழரசுக்கு இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப் பாகச் செயற்பட நாம் தயார் என தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வி.கே சிவஞானம் தெரிவித்தார்.

தமிழரசு கட்சியின் யாழ். அலுவலகத்தில்

11

## ஏப்ரலில் இலங்கை வருகின்றார் மோடி

கொழும்பு, மார்ச் 05

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, எதிர்வரும் ஏப்ரல் மாதம் முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஏப்ரல் 4ஆம் திகதி இலங்கை வரும் பிரதமர் மோடி 6ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் நாட்டில் தங்கியிருக்கும் காலப்

11

## சுயாதீன ஊடகச் செயல்பாட்டுக்கு அநாவசியமான தடைகளை நீக்குக!

### இலங்கையிடம் வலியுறுத்துகிறது ஐ.நா.

ஜெனிவா, மார்ச் 05

சமூகத்தின் குடியுரிமை மற்றும் சுயாதீனமான ஊடகங்களின் செயல்பாட்டுக்கு அநாவசியமான விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாட்டுக்களை நீக்குவதற்கு இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான இயக்குநர் வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது அமர்வில் நேற்று முன் தினம் உரையாற்றிய மனித உரிமைகளுக்கான சர்வதேச செயல்பாட்டுப்

11

## எமக்கெதிரான மனித உரிமைச் சவால்களை உள்ளக பொறிமுறையால் எதிர்கொள்வோம்!

### ஐ.நா. தீர்மானங்களை மீண்டும் நிராகரித்த இலங்கை




ஜெனீவா, மார்ச் 05

அரசியலமைப்பு கட்டமைப்புக்குள் நம்பகமான மற்றும் சுயாதீனமான உள்நாட்டு செயல்முறைகள் மூலம் மனித உரிமைகள் சவால்களை எதிர்கொள்வதற்கான இலங்கையின் உறுதிப்பாட்டை ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலகா வலியுறுத்தியுள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில்-

11

## சீர்திருத்தங்களைக் கடைப்பிடிப்பது நிலைத்தன்மையை உறுதிப்படுத்தும்

### சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 05

சீர்திருத்தங்களைக் கடைப்பிடிப்பதே இலங்கையின் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கான சிறந்த வழியென சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தலைவர் பீட்டர் ப்ரூயர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள அனைவரும் அதை அங்கீகரிப்பது முக்கியம் என அவர்

11



## நல்லிணக்க,பொறுப்புக்கூறல் செயல்பாடுகள் பாதிப்புற்ற மக்கள் ஆதரவை பெறவேண்டும்!

### இலங்கையிடம் இணை அனுசரணை நாடுகள் வலியுறுத்தல்

ஜெனிவா, மார்ச் 05

இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் முழுமையான நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட மக்களின் ஆதரவை பெற்றதாகக் கடந்தகால பரிந்துரைகளின் மேல் கட்டியெழுப்பப் பட்டதாக சர்வதேச தராதரத்தைத் பூர்த்தி செய்வதாக காணப்பட வேண்டும் என இணை அனுசரணை நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் பிரிட்டன், வடஅயர்லாந்து, கனடா, மலாவி,

11

## அரச மருத்துவர் சங்கத்தின் வேலைநிறுத்தம் ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 05

இன்று முதல் தொடங்க திட்டமிடப்பட்டிருந்த நாடளாவிய வேலைநிறுத்தத்தை ஒத்திவைக்க தீர்மானித்துள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸவுடன் நேற்று பிற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக

11

## சித்துப்பாத்தி மயானத்தில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் குறித்து ஆராய்வு!

யாழ்ப்பாணம், மார்ச் 05

அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புகள் மற்றும் தடயங்கள் தொடர்பான கலந்தாய்வு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி வ.ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

முறைப்பாட்டாளர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷும், காணாமல்

11

## கச்சதீவு திருவிழாவில் 3,400 இந்திய பக்தர்கள்

சென்னை, மார்ச் 05

இந்திய - இலங்கை இரு நாட்டு மக்களும் கலந்து கொள்ளும் கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா மார்ச் 14 ஆம் 15 ஆம் திகதிகளில் நடைபெறுகிறது. திருவிழாவில் இந்தியாவிலிருந்து கலந்து கொள்ள 3,464 பெயர் பதிவு செய்துள்ளனர்.

இந்த ஆண்டு கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற உள்ள திருவிழாவில் இந்திய

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்வெசும பயனாளிகள் சிலர் போதைப்பொருளுக்கு அடிமை!



கொழும்பு, மார்ச் 05

**அஸ்வெசும பயனாளிகள் சிலர் போதைப்பொருளுக்கு அடிமையாகியிருப்பதாகவும் இது தொடர்பில் விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத் தப்பட்டுள்ளது.**

பத்தாவது பாராளுமன்றத்தின் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு சார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் உபாலி பன்னிலகே, குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு நீண்ட கால மானியங்களை வழங்குவதற்குப் பதிலாக அவர்களில் பெரும்பாலானவர்களை வலுவூட்டுவதை அமைச்சு நோக்கமாகக் கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

அமைச்சின் பணிகள் மற்றும் அதன் நோக்கம் குறித்து குழுவுக்கு விளக்கமளித்த அமைச்சின் அதிகாரிகள், இது வரை 1. 7 மில்லியன் பேர் அஸ்வெசும பயனாளிகளாக இருப்பதாகவும், எதிர்வரும் 5 ஆண்டுகளில் இதில் 1. 5 மில்லியன் பேரை வலுவூட்டுவதே அமைச்சின் நோக்கம் என்றும் தெரிவித்தனர்.

அத்துடன், 2025ஆம் ஆண்டில் அஸ்வெசும பயனாளிகளில் 3 இலட்சம் பேரை வலுவூட்ட எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

மேலும், வாழ்வாதார மேம்பாடு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் சமூக நலன்புரி ஆகிய துறைகளின் கீழ் 10 நிறுவனங்கள் செயல்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

பாடசாலை மட்டங்களில் போதைப்பொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வுத் திட்டங்களை வினைத்திறனான முறையில் ஏற்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

சில அஸ்வெசும பயனாளிகள் கூட போதைப்பொருளுக்கு அடிமையாகியிருப்பதாகவும் இது தொடர்பில் விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேநேரம், குறைந்த வருமானம் பெறுவோருக்கு ஓய்வூதியம் மற்றும் அதற்கு சமமான சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தல், சமூக வலுவூட்டல் மாதிரிக் கிராமங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் 'ஸ்மார்ட் கிராமம்' திட்டம், கிராமப் புறங்களில் காணப்படும் நுண்நிதிப் பிரச்னை, இயலாமையுடைய நபர்களின் பிரச்னைகள், சிறுநீரக நோயாளிகளின் பிரச்னை குறித்தும் இந்தக் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது. (எ)

# கொக்குவிலில் வாள்வெட்டு; இளைஞரின் விரல் துண்டிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 05

கொக்குவில் பகுதியில் உள்ள களஞ்சியசாலையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் இளைஞர் ஒருவரின் விரல் துண்டாக்கப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவ தினத்தன்று மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குறித்த களஞ்சியசாலையில் இருந்த இளைஞர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த தாக்குதலில் விரல் துண்டாக்கப்பட்ட இளைஞர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-5)

# தீவிரவாத குழு பற்றி தகவல் கிடைத்தது!

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 05

கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமிய தீவிரவாத குழுவொன்று செயல்படுவது குறித்துத் தகவல்கள் கிடைத்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இந்தத் தீவிரவாத குழு குறித்து மேலதிக விவரங்களைப் பெறுவதற்கான முயற்சிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர் என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, இது தொடர்பில் ஏற்கனவே பாராளுமன்றத்தில் சில தகவல்களை வெளியிட்டுள்ளார் எனவும் நளிந்த ஜெயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

தீவிரவாத குழுவின் செயல்பாடுகள் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினர் மிகுந்த எச்சரிக்கை நிலையில் உள்ளனர் எனவும் அவர் கூறினார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)



# இராமேஸ்வரத்தில் திருவோடு ஏந்தி மீனவர்கள் நூதனப் போராட்டம்!

இராமேஸ்வரம், மார்ச் 05

இலங்கையில் கைது செய்யப்பட்ட மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவ மக்கள் தங்கச்சிமடத்தில் திருவோடு ஏந்தி நூதனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடற்படையால் கடந்த ஜனவரி முதல் 18 படகுகள் சிறைபிடிக்கப்பட்டு, 131 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். மேலும், 38 மீனவர்கள் தண்டனை பெற்று, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மேலும், தமிழகத்தைச் சேர்ந்த 42 மீனவர்கள், புதுச்சேரி மாநிலம் காரைக்காலைச் சேர்ந்த 13 மீனவர்கள் நீதிமன்றக் காவலில் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், மீனவர்களையும், படகுகளையும் நிபந்தனையின்றி விடுவிக்க வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த மாதம் 24 ஆம் திகதி முதல் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தங்கச்சிமடத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினர். பின்னர், மறுநாள் சனிக்கிழமை காத்திருப்புப் போராட்டத்தை தொடங்கினர். ஞாயிற்றுக்கிழமை 3ஆவது நாள் போராட்டத்தின்போது தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி காத்திருப்பு பந்தலில் அமர்ந்திருந்த மீனவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறியதுடன், "மீனவர் பிரச்னை குறித்து உடனடியாக தான் அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாக உறுதியளித்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இராமேஸ்வரம் மீனவர்கள் திருவோடு ஏந்தி போராட்டம் நடத்தினர். (எ)

"குடியை விடு பிள்ளைகளை படிக்க விடு"

# மதுபான நிலையத்துக்கு எதிராக நெடுந்தீவில் மக்கள் போராட்டம்!


நெடுந்தீவு, மார்ச் 05

மதுபான விற்பனை நிலையத்துக்கு எதிராக நெடுந்தீவில் மக்கள் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

நெடுந்தீவு பிரதேச செயலகம் முன்பாக நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை ஒன்று கூடிய மக்கள் மதுபான சாலைக்கு எதிராக பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நெடுந்தீவில் மதுபான விற்பனை நிலையத்துக்கு எதிராக அப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

இந்த நிலையில், அங்கு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனின் பங்கேற்புடன் இன்று புதன்கிழமை நடமாடும் சேவை நடைபெறவுள்ள நிலையில் மக்கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இதன்போது "குடியை விடு பிள்ளைகளை படிக்க விடு", "அரசியல் பேசவில்லை எம் ஆதங்கம் பேசுகிறது", "போதையை ஒழிப்போம்", "அதிகாரிகள் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்", "வேண்டாம் வேண்டாம் மரணம் வேண்டாம்", "எமது குடும்ப விளக்கை அணைத்து விடாதே" உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர். (எ)

# 4,255 கடலட்டைகளுடன் யாழில் 17 பேர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 05

யாழ்ப்பாணத்தில் சட்ட விரோதமான முறையில் பிடிக்கப்பட்ட 4,255 கடலட்டைகளுடன் 17 பேர் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தை அண்மித்த கடற்பரப்பில் கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட வேளையில் இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் கடலுக்கு கொண்டு சென்ற நான்கு படகுகள், சுழியோடி உபகரணங்கள், பிடிக்கப்பட்ட 4ஆயிரத்து 255 கடலட்டைகள் என்பனவும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள், மணியத்தோட்டம், உதயபுரம், குருநகர் மற்றும் அரியாலை ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் எனவும் 21 முதல் 56 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களையும், மீட்கப்பட்ட பொருட்களையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
05.03.2025 புதன்கிழமை
பிலவ வருடம், மாசி 21

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## கிழக்கில் முஸ்லிம் தீவிரவாதம்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமிய தீவிர வாத சிந்தனைகளை பரப்பும் நோக்கில் செயல்படும் முஸ்லிம் அமைப்பு அடையாளம் காணப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருக்கின்றார். இது தொடர்பில் பொலிஸ் புலனாய்வுத் துறை மேலதிக தவகவல்களை கண்டறியும் நோக்கில் உரிய நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். மிகவும் தெளிவாக முஸ்லிம் அமைப்பு என்று கூறுவதிலிருந்து விடயத்தின் தார்ப்பரியத்தை புரிந்து கொள்ள முடியும். இது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் புதிய சவாலாகவும் - அதே வேளை தற்போது அரசாங்கம் காண்பித்துவரும் மென்மையான அரசியல் முகத்தை தொடர்ந்தும் பேண முடியாமல் போகும் நிலைமையையும் ஏற்படுத்தலாம்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது இஸ்லாமிய அடிப்படைவாத குழுக்கள் தொடர்பான பார்வையை இலங்கை அரசு புறம்தள்ளியே வந்திருக்கின்றது. அதற்குமப்பால் யுத்த காலத்தின் தேவைக்காக ஊர்காவல் படைக் கட்மைப்பையும் பேணிவந்திருக்கின்றது. இந்தப் பின்னணியில் இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுக்கள் சுதந்திரமாக காலூன்றுவதற்கான வாய்ப்பும் உருவாகியது. கிழக்கு மாகாணம் தங்களுக்கானது என்னும் சிந்தனையும் மெதுவாக முஸ்லிம் குழுக்கள் மத்தியில் சந்தடியின்றி வளர்ந்தது. அதன் விளைவே இஸ்லாமிய அடிப்படைவாத சிந்தனையை பேணி வளர்ப்பதற்கான வாய்ப்பையும் சூழலையும் கனியச் செய்தது. கடந்த ஆண்டு, ஒக்ரோபர் மாதம், கிழக்கிலங்கையின் அறுகம் குடாவில் தங்கியிருந்த இஸ்ரேலியர்களை தாக்குவதற்கு திட்டம் தீட்டுமளவுக்கு சர்வதேச இஸ்லாமிய தொடர்புகள் கிழக்கில் வலுவாக இருந்திருக்கின்றன.

இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் கிழக்கில் வளர்வதற்கான சூழலை கண்டும் காணாமல் விட்டதன் விளைவாகவே, ஈஸ்டர் தாக்குதல் இடம்பெறுவதற்கான சூழல் உருவாகியது. கிழக்கிலங்கையில் இயங்கும் முஸ்லிம் மத அமைப்புகள் மற்றும் அடிப்படைவாத குழுக்கள் தொடர்பில் தீவிரமான அவதானத்தை இலங்கை படைத்துறை வைத்திருந்தால், அவ்வாறானதொரு தாக்குதல் இடம்பெறுவதற்கான புறச் சூழல் கனிந்திருக்காது.

கிழக்கிலங்கையை - குறிப்பாக காத்தான்குடியை அண்டிய முஸ்லிம்களின் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டே இஸ்லாமிய அரசுக்கான ஆதரவுச் சிந்தனைகள் வேரூன்றியிருக்கின்றன. ஆனால், இந்த விடயத்தில், கோட்டாபய தரப்பின் உள்ளூர் அரசியல் தொடர்பு அதிகம் முதன்மைப்படுத்தப்பட்டதால், இஸ்லாமிய தீவிரவாத சிந்தனைக்கான களம் தொடர்பிலும், அதனைத் தொடரக் கூடிய குழுக்கள் மீளெழுச்சி பெறலாம் என்னும் விடயங்கள் இரண்டாம் பட்சமாக்கப்பட்டன.

முஸ்லிம் அரசியல்வாதிகளும் ராஜபக்ஷக்களை முன்வைத்து கருத்துக் கூறினார்களே தவிர, தங்கள் சமூகத்துக்குள் இவ்வாறான சிந்தனை கொண்டவர்கள் இருக்கின்றார்கள் என்பதை பொது வெளிகளில் ஏற்றுக்கொள்ளும் அரசியல் துணிவற்றவர்களாகவே இருக்கின்றனர். பிள்ளையான் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டபோது அதனை முஸ்லிம் அரசியல்வாதிகள் இரசித்தனர். ஆனால், தற்போது அமைச்சரவை பேச்சாளர் வெளியிட்டிருக்கும் கருத்து தொடர்பில் எவ்வாறான பதிலைக் கொண்டிருக்கின்றனர்? இந்த விடயமானது, கிழக்கிலங்கையில் வாழும் ஈழத் தமிழ் மக்களுக்கும் ஓர் அபாய எச்சரிக்கையாகும்.

## நில அளவை மேற்கொள்ள முயற்சித்ததால் திருமலை முத்து நகர் கிராமத்தில் பரபரப்பு

திருகோணமலை, மார்ச் 05

திருகோணமலை மாவட்டம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள முத்து நகர் கிராமத்தில் நேற்று முன்தினம் இலங்கை துறைமுக அதிகார சபை அதிகாரிகள் நில அளவை மேற்கொள்ள முயற்சித்தபோது மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இதனால், அங்கு கைகலப்பு ஏற்பட்டது.

பொது மக்களின் பயிர்ச் செய்கை மற்றும் குடியிருப்பு காணிகளை நில அளவை செய்யும் நோக்கில் துறைமுக அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் பொலிஸாருடன் வருகை தந்தனர்.

இந்தக் காணிகளை தனியார் முதலீட்டுக்காக சூரிய மின் சக்தி உள்ளிட்டவற்றை மையமாக கொண்டு நீண்ட கால குத்தகைக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ள நிலையில் அதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் குறித்த பகுதிக்கு தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன வருகை தந்து துறைமுக அதிகார சபை உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு இது தொடர்பில் உரிய அமைச்சுக்களில் பேச்சுக்களை முன்னெடுத்து முடிவெடுப்பது தொடர்பில் பரிசீலனை செய்யப்பட வேண்டும் எனக் கோரியதன் அடிப்படையில் அங்கிருந்து அந்த அதிகாரிகள் சென்றதுடன் காணிக்கான நில அளவீடும் தடுத்து நிறுத்தப்பட்டது.

குறித்த முத்து நகர் கிராமத்தில் வாழும் மக்கள் பல வருட காலமாக விவசாயத்தை நம்பியே உள்ளனர்.

இந்த நிலையில், துறைமுக அதிகார சபையினரின் அச்சுறுத்தல் தொடர்ந்தும் நீடித்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (எ)

## மோ. சைக்கிள் - மின்கம்பத்தில் மோதியது இரண்டு பெண்கள் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், மார்ச் 05

மோட்டார் சைக்கிள் - மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றில் நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றது.

குடத்தனை பகுதியிலிருந்து மருதங்கேணி நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த போதே குறித்த மோட்டார் சைக்கிள் - மின்கம்பத்துடன் மோதி விபத்தில் சிக்கியது.

இந்த விபத்தில் காயமடைந்த இரண்டு பெண்களும் மருதங்கேணி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## 31 கிலோ கேரளக் கஞ்சாவுடன் மன்னாரில் ஒருவர் சிக்கினார்



மன்னார், மார்ச் 05

31 கிலோ கேரளக் கஞ்சாவுடன் மன்னாரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படை புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில், மன்னார் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார், மன்னார் - சிலாவத்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யாசீம் சிற்றி பகுதியில் வைத்து பெருந்தொகை கேரளக் கஞ்சாவுடன் ஒருவரை கைது செய்தனர்.

கடந்த 2 ஆம் திகதி மாலை இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, 31 கிலோ 62 கிராம் கேரளக் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சவரிபுரம், சிலாவத்துறை பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் கூறினர். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

மார்ச் -05 புதன்கிழமை
குரோதி வருடம் - மாசி21
நல்ல நேரம்:9.00-10.30
ராகு காலம்:12.00 -1.30
திதி :சஷ்டி




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். கணுக்கால் வலிக்கும். வளைந்து கொடுத்து செல்ல வேண்டிய நாள்.

**இடபம்**
வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். வாகனத்தை எடுக்கும் முன் எரி பொருள் இருக்கிறதா என பார்த்துக் கொள்ளுங்கள். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம்.

**மிதுனம்**
சபைகளில் மரியாதை கிடைக்கும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். மதிப்பு மரியாதை கூடும் நாள்.

**கடகம்**
பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் அமைதி நிலவும். இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடிவடையும். விலகி நின்ற உறவுகள் விரும்பி வந்து பேசுவார்கள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். மற்றவர்களின் பிரச்னையில் தலையிடுவதால் வீண் பழிச் சொல் ஏற்படும்.

**துலாம்**
ஆடை ஆபரணம் சேரும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். தாயாரின் உடல் நிலை சீராகும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**விருட்சிகம்**
வாகன வசதிப் பெருகும். உறவினர் நண்பர்களில் சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளரின் நம்பிக்கையை பெறுவீர்கள். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**தனுசு**
சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மகரம்**
பயணங்களால் பயனடைவீர்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். உயரும் நாள்.

**கும்பம்**
விருந்தினர் வருகை அதிகரிக்கும். சொத்துப் பிரச்னைக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். உடன் பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

# 200 கிலோ கேரள கஞ்சா நேற்று அதிகாலை மீட்பு!

### யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கும் கடத்தல்



யாழ்ப்பாணம், மார்ச்.05

வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் நேற்றையதினம் அதிகாலை 200 கிலோ கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

வெற்றிலைக்கேணி கடற்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து பொலிஸ் விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து வத்திராயன் கடற்கரை பகுதியில் கடற்படையினரால் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தேடுதலின்போது கடத்திச் செல்வதற்காக தயார் நிலையில் காணப்பட்ட 123 கிலோ கேரளக் கஞ்சா முதலில் மீட்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மேலும், கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன. இதன் மூலம் மொத்தமாக 200 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது.

இது தொடர்பில் யாரும் கைது செய்யப்படவில்லை. மீட்கப்பட்ட கேரளக் கஞ்சா மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(எ-05)

# வலிகாமம் கல்வி வலயத்தில் கடல்புல் தினம் அனுஷ்டிப்பு



யாழ்ப்பாணம், மார்ச்.05

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நீருயிர்வள தொழில்நுட்ப பாடம் கற்கும் தரம் - 11 மாணவர்களுக்கு இடையே கடல்புல் தொடர்பான விழிப்புணர்வு வினாடி வினா போட்டி நடத்தப்பட்டு அதில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வலிகாமம் கல்வி வலயத்தின் மாநாட்டு மண்டபத்தில் தொழில்நுட்ப பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நளாயினி வசந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஜமுனா ராஜசீலனும், சிறப்பு விருந்தினராக வலிகா மம் கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. சஞ்சீவனும் கலந்து கொண்டனர்.

அத்து டன் இந்த நிகழ்வில் கிளீன் ஓசன் போசஸ்ஸின் மாவட்ட பிரதிநிதி ம. சசிகரன் மற்றும் வலயத்தின் விவசாய பாட ஆசி ரிய ஆலோசகர் ப. அருந்தவம் ஆகியோரும் கலந்து கொண் டனர்.

இதன்போது, மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர் இதற்கான அனுசரணையை கிளீன் ஓசன் போசஸ் அமைப்பு வழங்கியிருந்தது.

# வடமாகாண ஆளுநரின் பங்கேற்புடன் நெடுந்தீவில் இன்று நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மார்ச்.05

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனின் பங்கேற்புடன் இன்று புதன்கிழமை நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் காலை 09. 00 மணி முதல் பிற்பகல் 03. 00 மணி வரை நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 5 அமைச்சுக்களின் செயலாளர்கள், அமைச்சுக்களின் கீழான அனைத்துத் திணைக்களங்களின் தலைவர்களும், அதற்கு மேலதிகமாக மத்திய அரசின் கீழான இலங்கை மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, கடற்றொழில் நீரியல்வளங்கள் திணைக்களம், கரையோர பாதுகாப்புத் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றின் பிராந்தியத் திணைக்களத் தலைவர்களும் இந்த நடமாடும் சேவையில் பங்கேற்கவுள்ளனர்.

இந்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ஊடாக சேவைகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பொதுமக்கள் நடமாடும் சேவையில் கலந்து கொள்ளுமாறு ஆளுநர் அறிவித்துள்ளார். (எ)

# சுற்றுலா முதலீடுகள் தொடர்வில் யாழில் விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச்.05

சுற்றுலா முதலீடுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் இந்திய முதலீட்டாளர்கள், இந்தியாவுடன் இணைந்த வகையில் யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளில் ஆன்மீகம் மற்றும் ஆரோக்கிய சுற்றுலாத் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பான சாத்தியப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது,

இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் முதலீட்டுப் பிரிவின் பணிப்பாளர், வடக்கு மாகாண சுற்றுலாத்துறை பணி யகத் தலைவர், யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்கள் (காணி), இந்திய முதலீட்டாளர் குழு, காணி ஆணையாளர் அலுவலக பிரதிநிதி,

மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள், காணி உத்தியோகத்தர்கள் உட்பட சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சூத்திரத்துடன் எரிபொருள் விநியோகஸ்தர்கள் உடன்பாடு!

## அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, மார்ச் 05

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்வைத்த புதிய சூத்திரத்துடன் எரிபொருள் விநியோகஸ்தர்கள் தங்கள் உடன்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

நேற்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற அவர், புதிய சூத்திரம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், விநியோகஸ்தர்களின் முன்மொழிவு குறித்து கலந்துரையாட 18 ஆம் திகதி மற்றொரு கலந்துரையாடல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ-

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்திய சூத்திரத்தை செயல்படுத்த ஒரு ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது.

அந்த ஒப்பந்தத்தின்படி பணிகள் தொடரும்.

இதற்கிடையில், எரிபொருள் வாங்குபவர்களும் தங்களுக்கு பொருத்தமான பல பிரச்னைகளை முன்வைத்துள்ளனர்.



அந்தப் பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாட, புதிய சூத்திரம் செயல்படுத்தப்படும் போது விநியோகஸ்தர்களின் முன்மொழிவுகளைக் கேட்க 18 ஆம் திகதி காலை மீண்டும் ஒரு கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. எனவே, எரிபொருள் பிரச்சினை இல்லை-என்றார். (அ)

# கல்முனை வடக்கு பிரதேச செயலகம் நீதியை பெற்றுக்கொடுக்கவேண்டும்!

## கோடீஸ்வரன் எம்.பி. வேண்டுகோள்

கொழும்பு, மார்ச் 5

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பில் அரசாங்கம் நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில்நேற்று இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த வேண்டுகோளை முன் வைத்தார். (அ)

# அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளராக சம்புத் கொட்டுவேகொட!

கொழும்பு, மார்ச் 05

தற்போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் பதவியில் கடமையாற்றிய ஓய்வு நிலை மேஜர் ஜெனரல் எச்.எம்.யூ.ஹேரதின் ஒப்பந்த சேவைக்காலம் எதிர்வரும் 07 ஆம் திகதியுடன் நிறைவு பெறவுள்ளது.

அதற்கமைய, அன்று தொடக்கம் வெற்றிடமாகவுள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் பதவி வெற்றிடத்திற்கு ஓய்வு நிலை மேஜர் ஜெனரல் சம்பத் கொட் டுவேகொடவை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஒப்பந்த சேவை அடிப்படையில் ஒரு வருட காலத்துக்கு நியமிப்பதற்கு ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# 44 நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் அதிகரிப்பு

ජාතික ජල සම්පාදන හා ජලාපවහන මණ්ඩලය
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை
NATIONAL WATER SUPPLY & DRAINAGE BOARD

கொழும்பு, மார்ச் 05

கடந்த சில நாட்களாக நீரேந்தும் பகுதிகளில் பெய்த பலத்த மழையினால் 73 பிரதான நீர்த் தேக்கங்களில் 44 நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ள தாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, சேனநாயக்க சமுத் திர, மகாகங்கரவ, நுவரவெவ, மகா விலச்சிய, மல்வத்து ஓயா, ருக்கம் குளம், லுணுகம்வெ ஹெர, பகிரிய, வீரவில, கிரிந்தி ஓயா, மாணிக்க கங்கை மற்றும் வெஹெரகல ஆகிய நீர்த்தேக் கங்களில் இருந்து தற்போது கணிசமான அளவு நீர் ஆற்றை சென்றடைக்கின்றது.

வரும் நாட்களில் வறட்சி நிலவும் என எதிர்பார்க்கப்படுவதனால் நீர்த்தேக்கங்களிலி ருந்து தண்ணீரை வெளியேற்ற வேண்டிய அவசியம் குறைவடையும் என நீர்ப்பாசனத் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது. (அ)

உள்ளூராட்சி மன்ற தேர்தல்;

# தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பம் மார்ச் 12 ஆம் திகதி வரை ஏற்கப்படும்

கொழும்பு, மார்ச் 05

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில்-

உளளூராட்சி மன்ற தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விரும்பும் அரச ஊழியர்களின் விண்ணப்பங்கள் மார்ச் 03 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளல் அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து ( www.election.gov.lk ) பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது அதற்குரிய தகவல்கள் 2024 உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேருநர் இடாப்பிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வேண்டும்.

2024 உள்ளூர் அதிகாரசபைகளுக்கான தேருநர் இடாப்புத் தகவல்களை பெற்றுக்கொள்ள தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குள் பிரவேசிக்கலாம்.

அது தவிர, மாவட்ட செயலகங்கள், மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்கள், உள்ளூர் அதிகாரசபைகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் ஆகியவற்றிலிருந்தும் 2024 உள்ளூர் அதிகாரசபைகளுக்கான தேருநர் இடாப்புத் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்-என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வெலிகம பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு பிடியாணை!

கொழும்பு, மார்ச் 05

வெலிகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உப்புல் குமாரவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மாத்தறை பதில் நீதிவான் சட்டத்தரணி உபாலி ரணசிங்க பிடியாணை பிறப்பித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி மாத்தறை, பெலேன பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றின் முன்னால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பிலேயே பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடு தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட அறிக்கைகளை கருத்தில் கொண்டே இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், கொழும்பு குற்றப்பிரிவின் பொறுப்பதிகாரி அன்செல்ம் டி சில்வா உட்பட எட்டு சந்தேகநபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இளம் பெண்கள் இருவர் கைது!

கொழும்பு, மார்ச் 05

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுக்களை சட்ட விரோதமாக நாட்டிற்குள் கொண்டுவர முற்பட்ட இரு பெண்களை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியக அதிகாரிகள் நேற்றுக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்தனர்.

பொலனறுவை மற்றும் நாரம்மல பகுதிகளை சேர்ந்த 32 மற்றும் 23 வயதான பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், அவர்களிடமிருந்து சுமார் மூன்று மில்லியன் ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டு சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண்கள் சிகரெட்டுகளை கொண்டுவருவதற்காகவே சுற்றுலா விஸாக்களின் மூலம் டுபாய்க்குச் சென்றுள்ளதாகவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (அ)

# சாணக்கியன், அர்ச்சுனா எம்.பிக்களுக்கு சபையில் எச்சரிக்கை செய்த சபாநாயகர்

கொழும்பு, மார்ச் 05

பாராளுமன்றத்தில் ஒழுக்கமாக நடந்துகொள்ளுமாறு இராசமாணிக்கம் சாணக்கியன் மற்றும் இராமநாதன் அர்ச்சுனா ஆகியோருக்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன கடும் தொனியில் எச்சரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றம் நேற்று கூடியபோது மட்டக்களப்பில் இடம்பெறும் வாள்வெட்டு சம்பவங்கள் குறித்து சாணக்கியன் எம்.பி. சபையின் கவனத்துக்குக் கொண்டுவர முயற்சித்தார். எனினும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை இல்லையென அதற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை.

அதனைத் தொடர்ந்து மக்கள் பிரச்னையை பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்படவேண்டும் என அர்ச்சுனா எம்.பி கோரிக்கை விடுத்தார்.

மக்கள் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்தில் பேசாமல் வேறு எங்கே கருத்து வெளியிடுவது என அவர் கேள்வி எழுப்பினார்.

அதனையடுத்து சபையில் குழப்ப நிலை தோன்றியது.

பாராளுமன்றத்தில் கடந்த காலங்களில் உறுப்பினர்களுக்கு தமது பிரச்னைகளை வெளிக்கொண்டுவர வாய்ப்பளிக்கப்பட்டதைப் போல சந்தர்ப்பம் வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதன்போது வேண்டுகோள் விடுத்தார்.

அதன் பின்னர் சாணக்கியன் எம்.பி. மட்டக்களப்பில் வாள் வெட்டுச் சம்பவங்கள் தொடர்பிலான பிரச்னையை முன்வைத்தார்.

இதேவேளை, அர்ச்சுனா எம்.பி.யும் அங்கு கருத்து வெளியிட்டார்.

பாராளுமன்றத்தில் தனது நடத்தை குறித்து மன்னிப்பு கோருவதாக அவர் கூறினார். மேலும், திருகோணமலை மாவட்ட வைத்தியசாலையில் வைத்தியர் ஒருவர் நோயாளிகளைத் தாக்கி அது பற்றிய காணொளியை வெளியிட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

எனினும் அதன்போது குறுக்கிட்ட சபாநாயகர், இந்த விடயத்தை தனிநபர் பிரேரணை ஒன்றின் ஊடாக முன்வைக்குமாறு கோரினார்.

அதன் பின்னர் சாணக்கியன், அர்ச்சுனா ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் சபையில் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட சபாநாயகர், பாராளுமன்றத்தில் இருவரின் நடத்தை கவலையளிப்பதாகவும் ஒழுக்கமாக நடந்துகொள்ளுமாறும் எச்சரிக்கை விடுத்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மின்சாரசபை சீரமைப்பில் அரசுக்கு கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை!

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 05

**மின்சார சபைச் சட்டத்தை மறுசீரமைப்பதற்காக நிபுணத்துவ குழு முன்வைத்துள்ள அறிக்கைக்கும், ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களுக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒன்று மின்சார சபையை தனியார் மயப்படுத்த வேண்டும் அல்லது பங்குகளை தனியாருக்கு வழங்க வேண்டும். கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்ற நிலையில் இருந்து கொண்டு அடிப்படை பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் வலுசக்தி அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வலுசக்தி துறை தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கை என்னவென்பது கேள்விக்குள்ளாகியுள்ளது. சந்தை வாய்ப்பை உருவாக்க முயற்சிக்கின்றீர்களா அல்லது தனித்த கொள்வனவாளருடன் ஒன்றிணைந்து செயல்படப்போகின்றீர்களா, ஆகவே உங்களின் அடிப்படை கொள்கை என்ன?

75 ஆண்டுகால அரசாங்கங்களின் தவறான பொருளாதார முகாமைத்துவ கொள்கையினால் நாடு வங்குரோத்து நிலையடைந்தது என்று குறிப்பிட்டீர்கள். அவ்வாறாயின் வங்குரோத்து நிலையடையாத உங்களின் கொள்கை என்ன?

இலங்கை மின்சார சபை 2022 ஆம் ஆண்டு 298 பில்லியன் ரூபாய் நட்டம் எதிர்க்கொண்டிருந்தது. 2023 ஆம் ஆண்டு உற்பத்திச் செலவுக்கு அமைய கட்டணம் மற்றும் இதர செலவுகளை நிர்ணயித்ததை தொடர்ந்து மின்சார சபை 61 பில்லியன் ரூபாய் இலாபமடைந்தது.

அத்துடன் 2024 ஒக்ரோபர் மாதம் வரையிலான காலப்பகுதியில் 140 பில்லியன் ரூபாய் இலாபமடைந்துள்ளது. இந்த மாற்றத்தை எந்தளவுக்கு முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்பது பிரச்னைக்குள்ளாகியுள்ளது.

2024 ஆம் ஆண்டு மின்சார சபைச் சட்டத்தை மறுசீரமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கான சட்ட வரைவு அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ள நிலையில் நிதியமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி மாறுபட்ட நிலைப்பாட்டை முன்வைத்துள்ளார்.

அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரைவில் " பிரதான பங்குதாரர்களை உள்ளடக்கிய குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் " என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த குழுவை அமைத்தால் மாத்திரமே சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மின்சாரத்துறை சட்டத்தை மறுசீரமைப்பதற்காக 9 உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்த குழுவில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஆறு பேரும், லெகோ மற்றும் இலங்கை மின்சார சபையின் தலைவர்கள் இருவர், மற்றும் தனியார் நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் உறுப்பினர்களாவர்.

இந்த குழுவில் சட்டத்தரணிகளோ, நிதியியல் துறையுடன் தொடர்புடையவர்களோ உள்ளடக்கப்படவில்லை. இந்த குழு சமர்ப்பித்த அறிக்கைக்கு மாறாகவே நிதியமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி ஒருசில முன்மொழிவுகளை முன்வைத்துள்ளார். குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை மீளாய்வு செய்யுமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

மின்கட்டணம் திருத்தம் தொடர்பான அதிகாரம் மின்சார அமைச்சருக்கு வழங்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரைத்துள்ளது. ஆனால் கட்டண திருத்தம் தீர்மானம் மக்களின் அபிலாசைகளுடன் இடம்பெற வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். பொதுஜன அபிப்பிராயத்தின் ஊடாகவே மின் கட்டணம் தற்போது குறைக்கப்பட்டுள்ளது. ஆகவே ஜனாதிபதியின் அறிவுறுத்தல் சரி.

ஆகவே குழுவின் அறிக்கைக்கும், ஜனாதிபதியின் பரிந்துரைகளுக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன. மின்சாரத்துறை அமைச்சர் சரியா அல்லது ஜனாதிபதி சரியா, குழுவின் பரிந்துரைகளை முறையாக மீளாய்வு செய்யுங்கள்-என்றார். (அ)

# மாணவர்களை ஏற்றாமல் செல்லும் பஸ்களுக்கு எதிராக நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 05

பாடசாலை மாணவர்களையும் இலங்கை போக்குவரத்துச் சபை பருவச்சீட்டு பயண அட்டைகளைப் பயன்படுத்தி பயணம் செய்யும் பயணிகளையும் புறக்கணிக்கும் பஸ் சாரதிகளை 1958 என்ற தொலைப்பேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறு அரசாங்கம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.


போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இந்த பிரச்னை விவாதிக்கப்பட்டு, தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதுகுறித்து எந்தவொரு நபரும் 1958 என்ற இலக்கத்துக்கு முறைப்பாடு வழங்கலாம் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

மேலும், இந்த பிரச்னை தொடர்பில் தான் அறிந்துள்ளதாகவும், இவ்வாறான தவறான செயற்பாடுகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் சாரதிகளும் பரிசோதகர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கையின் மிகப்பெரிய மீன்பிடி படகு திக்கோவிட்டவில் அறிமுகம்!




கொழும்பு, மார்ச் 05

தனுஷ மரைன் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட மிகப்பெரிய மீன்பிடி படகின் வெளியீட்டு விழா திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்தில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வள அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையில் நடைபெற்றது.


சோமாலியாவில் இருந்து பெறப்பட்ட கோரிக்கை பிரகாரம் 24 மீற்றர் கொண்ட இந்த பிரமாண்ட மீன்பிடி படகு சர்வதேச தரம் மற்றும் நவீன தொழில்நுட்பத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

தனுஷ மரைன் நிறுவனம் தென் கொரியா, கென்யா, சுவீடன் மற்றும் நோர்வே உள்ளிட்ட பல வெளிநாடுகளுக்கு மீன்பிடி படகுகளை தயாரித்து ஏற்றுமதி செய்து வருகிறது. (அ)

# 240 டொலரை திருப்பிக்கொடுத்த அமைச்சர் சாவித்திரி போல்ராஜ்!

கொழும்பு, மார்ச் 05

ஜெனீவாவில் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை ஐக்கிய நாடுகள் சபையின் "பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை மாநாட்டின் 90 ஆவது அமர்வு நடைபெற்றது.


Saroja Paulraj

I returned to the ministry and got a tax card and accounted for 240 USD (40 USD per day × 6 da
for additional expenses given by the ministry to attend the CEDAW conference in Geneva from February 11 - 16.

இந்த அமர்வில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் கலந்து கொண்டார்.

இந்நிலையில், மாநாட்டில் பங்கேற்பதற்காக மேலதிக செலவுகளுக்காக ஒரு நாளைக்கு 40 அமெரிக்க டொலர்கள் படி 6 நாட்களுக்கு வழங்கப்பட்ட 240 அமெரிக்க டொலர்களை அரசாங்கத்துக்கு திருப்பிக் கொடுத்துள்ளார்.

அவர் அந்த பணத்தைச் செலவு செய்யாமல் அப்படியே திருப்பிக் கொடுத்துள்ளார். பணத்தை திருப்பிக் கொடுத்தமைக்கான பற்றுச்சீட்டை அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். (அ)

# வருடாந்தம் 4000 முதல் 5000 வரையான குழந்தைகளுக்குப் பிறவிக் குறைபாடு!

கொழும்பு, மார்ச் 05

வருடாந்தம் இலங்கையில் 3 இலட்சத்து 20 ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன. எனினும் அவர்களில் சுமார் 4 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரத்துக்கு இடைப்பட்டக் குழந்தைகள் பிறவிக் குறைபாடு நோய்களுடன் பிறப்பதாக விசேட வைத்திய நிபுணர் கபில ஜயரத்ன தெரிவித்தார்.

மார்ச் 3 சர்வதேச பிறவி குறைபாடு நோய் தினத்தை முன்னிட்டு கொழும்பில் அமைந்துள்ள இலங்கை மருத்துவ சங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் முதன் முறையாக 2006 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் பிறவிக் குறைபாடு நோய்கள் தொடர்பில் விசேட ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது.

18 ஆயிரம் குழந்தைகளை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட மேற்படி ஆய்வின்போது நாட்டில் சிசு இறப்பு வீதம் குறைவடைந்து உள்ளதுடன், பிறவிக் குறைபாடு நோய்களுடன் பிறக்கும் குழந்தைகளின் வீதம் அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளது.

வருடாந்தம் இலங்கையில் 3 இலட்சத்து 20 ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன. அவர்களில் சுமார் 4 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரத்துக்கு இடைப்பட்டக் குழந்தைகள் பிறவிக் குறைபாடு நோய்களுடன் பிறப்பதாக தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

அத்தோடு வருடாவருடம் நாட்டின் பிறப்பு வீதமும் கணிசமான அளவில் குறைவடைந்து செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. மேலும் 5 வயதுக்கு குறைந்த சிறுவர்களின் உயிரிழப்புக்கு 39 சதவீதம் பிறவிக் குறைபாடு நோய்களே பிரதான காரணமாக உள்ளது.

வெளிப்பார்வைக்கு புலப்படும் வகையிலும், எமது பார்வைக்கு அப்பாற்பட்டு உடல் உறுப்பு சார்ந்த பகுதிகளில் ஏற்படும் குறைபாட்டு நோய்களும் உள்ளன.

பிறவிக் குறைபாடு நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிவதுடன் உரிய சிகிச்சைகளை முறையாக பெறும் பட்சத்தில் நோயை முழுமையாக குணப்படுத்திக் கொள்ள முடியும்.

யாழ். போதனா வைத்தியசாலை, வவுனியா வைத்தியசாலை, கண்டி தேசிய வைத்தியசாலை, பேராதனை வைத்தியசாலை, கொழும்பு சிறுவர் வைத்தியசாலை, கராபிட்டிய தேசிய வைத்தியசாலை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளில் விசேடமாக சிறுவர்களின் பிறவிக் குறைபாடு நோய் தொடர்பில் உரிய சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

பிறக்கும் குழந்தைகளில் 30 பேரில் ஒருவருக்கு பிறவிக் குறைபாடு நோய் உள்ளது. அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய பாரதூரமான பிறவிக் குறைபாடு நோய் காரணமாக குழந்தை யின் எதிர்காலம் பாதிக்கப்படுவதுடன், அவர்களது குடும்பமும் பொருளாதாரம் உள்ளிட்ட பல சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படலாம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவா குற்றச்சாட்டுக்கு உயிர் கொடுக்கிறார் அநுர!

## சாடுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, மார்ச் 05

**போரின்போது இலங்கைப் படையினர் போர்க்குற்றம் இழைத்தனர் என ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு உயிர்கொடுக்கும் வகையிலேயே ஜனாதிபதியின் அறிவிப்பு அமைந்துள்ளது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

இலங்கையிலுள்ள இராணுவத்தை அரசுக்கு (நாட்டுக்கு) சார்பான தொழில்முறை இராணுவமாக கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

அதாவது அரசுக்கு சார்பு அற்ற, தொழில்முறையற்ற இராணுவமே தற்போது உள்ளது என்ற கருத்தையே இதன் மூலம் ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார்.

போரின்போது தொழில்முறை இராணுவத்துக்கு பொருத்தமற்ற விதத்தில் இராணுவம் போர்க்குற்றம் இழைந்தது என ஜெனிவா மனித உரிமை பேரவையாலும், டயஸ்போராக்களாலும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இந்த தவறான கருத்தை உண்மையாக்குவதற்கு மேற்படி தரப்புகள் முயற்சித்து வருகின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இராணுவம் அரசுக்கு சார்பற்றது, தொழில்முறையற்றது என்ற கருத்தை பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி வெளியிட்டுள்ளார். தொழில்முறையற்ற இராணுவத்தால் போரை முடித்திருக்க முடியுமா?

தொழில்முறையல்ல இராணுவம் எனக் கூறப்படுவதன் அர்த்தம், போர்க்குற்றங்களில் ஈடுபடக்கூடிய இராணுவம் என்பதாகும்.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியின் இந்த, பாதுகாப்பு படையினர்மீதான தாக்குதலானது ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கும், டயஸ்போராக்களுக்கும் சாதகமாக அமைந்துள்ளது.

படை குறைப்பு தொடர்பிலும் ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருந்தார். அதற்குரிய நடவடிக்கை தற்போது ஆரம்பமாகியுள்ளது.

படையினருக்கு வழங்கப்படும் இறைச்சிகூட நிறுத்தப்பட்டுள்ளது. மரக்கறி உணவுதான் வழங்கப்படுகின் றது.

எமது பாதுகாப்பு படையினர் அரசுக்கு சார்பானவர்களே, அவ்வாறு இருந்ததால்தான் பயங்கரவாதிகள் ஒழித்தனர்.

அனர்த் தங்கள் ஏற்படும் போது சேவை செய்ய வருகின்றனர். எனவே, ஜனாதிபதியின் அறி விப்பை நாம் வன்மையாகக் கண்டிக் கின்றோம்-என்றார். (அ)

# மீதெனியவில் துப்பாக்கிச்சூடு பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, மார்ச் 05

மீதெனியவில் அண்மையில் நடந்த மூன்று கொலைகள் தொடர்பாக வீரகெட்டிய பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று முன் தினம் மாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஜூலம்பிட்டியவைச் சேர்ந்த 36 வயதுடைய சந்தேக நபர், துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களுக்கு 12 ரி-56 துப்பாக்கி ரவைகளை வழங்கியுள்ளதாக விசாரணையில் கண்டறியப் பட்டுள்ளது.

பெப்ரவரி 18 ஆம் திகதி நடந்த இந்த துப்பாக்கிச் சூட்டில் அருண விதானகமகே மற்றும் அவரது இரண்டு குழந்தைகள் உயிரிழந்தனர்.

விசாரணையின் மூலம் இதுவரை ஏழு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# இலங்கை விமானப்படைக்கு புதிய தலைமை அதிகாரி!

கொழும்பு, மார்ச் 05

இலங்கை விமானப்படையின் புதிய தலைமை அதிகாரியாக எயார் வைஸ் மார்ஷல் லசித சுமணவீர நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை விமானப் படை தெரிவித்துள்ளது.

தற்போது விமான நடவடிக்கைகளின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றும் எயார் வைஸ் மார்ஷல் லசித சுமணவீர 1991 ஆம் ஆண்டு இலங்கை விமானப்படையில் இணைந்துகொண்டார்.



இலங்கை விமானப்படையின் தலைமை அதிகாரியாக பணியாற்றிய எயார் வைஸ் மார்ஷல் சம்பத் விக்ரமரத்ன நேற்று முன் தினம் ஓய்வு பெற்றமையும் குறிப்பிடத் தக்கது. (அ)

# கொழும்பு துறைமுகம் வந்தது இந்தியக் கடற்படையின் குதர்!




கொழும்பு, மார்ச் 05

இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான "ஐஎன்எஸ் குதர்" என்ற கப்பல் மூன்று நாள் விஜயமாக நேற்று முன் தினம் திங்கட்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த கப்பலை இலங்கை கடற்படையினர் சம்பிரதாய பூர்வமாக வரவேற்றனர்.

இந்த கப்பலின் கட்டளை அதிகாரி நிதின் சர்மா மற்றும் இலங்கைக் கடற்படையின் மேற்கு கடல் தளபதி ரியர் அட்மிரல் எம்.எச்.சி.ஜே. சில்வா ஆகியாருக்கிடையில் சந்திப்பு இடம்பெற்றது.

இந்த கப்பல் வருகையின் ஒரு பகுதியாக இலங்கை கடலோர காவல்படையின் சுரக்ஷா கப்பலுக்கு முக்கிய பாதுகாப்பு அமைப்பின் அத்தியாவசிய அங்கமான தீயணைப்பு அமைப்பின் நிரப்பப்பட்ட சிலிண்டர் கையளிக்கப்பட்டது. எஸ்.எல்.சி.ஜி.எஸ் சுரக்ஷா கப்பலானது கடந்த 2017 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ஒரு கடல் ரோந்துக் கப்பலாகும்.

முன்னதாக ஜூன் 2021 மற்றும் ஏப்ரல் 2022 இல் இந்தியா சுரக்ஷா கப்பலுக்கான உதிரி பாகங்களை நன்கொடையாக வழங்கியது. ஜனவரி 2024 இல் ஹாலோன் சிலிண்டர்களை மீண்டும் நிரப்புவதற்கான உதவியையும் வழங்கியது. இந்த செயற்பாடானது, பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பின் பகிரப்பட்ட சவால்களை எதிர்கொள்ளும் திறனை வளர்ப்பதற்கு ஆதரவளிப்பதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை இது அடையாளப்படுத்துகிறது.

இக்கப்பலின் செயல்பாட்டுத் திறன்கள் குறித்து இலங்கை கடற்படை வீரர்களுக்குக் கற்பிக்கும் ஒரு நிகழ்ச்சியும் கப்பலில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த கப்பல் இலங்கை கடற்படையுடன் விளையாட்டு போட்டிகள் மற்றும் யோகா பயிற்சியையும் மேற்கொள்ளவுள்ளது.

பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பின் பகிரப்பட்ட சவால்களை திறம்பட எதிர்கொள்வதற்காக இலங்கை கடற்படையின் திறன்களை அதிகரிப்பதில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்புக்கான சாத்தியக்கூறுகளைக் கருத்தில் கொண்டு, இந்திய கடற்படைக் கப்பலான குதரின் அமைந்துள்ளது. (அ)

# மன்னார் காற்றாலை மின் திட்டத்துக்கு மக்கள் எதிர்ப்பை வெளியிடுகின்றனர்

## இலங்கைத் தமிழரசுக் கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 05

மன்னார் மாவட்டத்தில் காற்றாலை திட்டத்தின் இரண்டாம் கட்டம் ஆரம்பமாகியுள்ளது. இத்திட்டத்துக்கு அப்பிரதேச மக்கள் எதிர்ப்புகளை வெளிப்படுத்தியுள்ளனர். மக்களுக்கு வெளிப்படைத் தன்மையுடன் செயற்படாமல் சில தனியார் நிறுவனங்களை திருப்திப்படுத்த கூடியவாறு செயற்பட்டமையினாலும் மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் வலுசக்தி அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வரவு-செலவுத் திட்டத்தில் மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்கும் உட்கட்டமைப்பு நவீன மயப்படுத்தலுக்கும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவேற்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தியில் வடக்கு, கிழக்கில் காற்றாலை மின் திட்டம் மிகவும் பாதுகாப்பான மீள் புதுப்பிக்கதக்க சக்தியை உற்பத்தி செய்யக்கூடிய முறையாக உள்ளது. காற்றாலையில் மிகவும் குறைந்த உற்பத்திச் செலவு மற்றும் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு குறைவாகும்.

இந்நிலையில் மன்னார் மாவட்டத்தில் காற்றாலை மின் திட்டத்தின் இரண்டாம் கட்டம் ஆரம்பமாகின்றது. இதில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகங்களால் மக்கள் எதிர்ப்புகளை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த திட்டத்திற்காக முதலீடு செய்த நிறுவனத்தின் செயற்பாடு மக்கள் எதிர்ப்புக்கு காரணமாக இருக்கின்றது.

மக்களுக்கு வெளிப்படைத் தன்மையுடன் செய்யாமையினாலும் சில தனியார் நிறுவனங்களை திருப்திப்படுத்தக்கூடியவாறு செயற்பட்டமையினாலும் மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர். முதல் கட்ட திட்டத்தால் மழை நீர் வழிந்தோட முடியாது சில நாட்களுக்கு வெள்ள நிலைமை காணப்படுகின்றது.

அங்குள்ள மக்கள் இந்த திட்டத்தில் கவனிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் உள்ளன. வேலைவாய்ப்புகளை அந்த சமூகத்தினருக்கு வழங்காமை பிரச்னைக்குரியதாக உள்ளது.

இதேவேளை சூரிய சக்தி மின்சாரம் தொடர்பிலும் பிரச்னைகள் உள்ளன. மக்கள் இந்த திட்டத்திற்கு ஆவலாக இருக்கின்றனர்.

ஆனால் அந்த திட்டத்தை தமது வீட்டுக் கூரையில் பொருத்த மக்கள் தீர்மானித்தாலும் மின்சார சபை அதன் கொள்ளவு முறைமை இல்லாமையினால் அதற்கான அனுமதியை வழங்காமல் இருக்கின்றனர்-என்றார். (அ)

# கணேமுல்ல சஞ்சீவ சம்பவ துப்பாக்கிதாரி மற்றொரு துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்பு!

கொழும்பு, மார்ச் 05

பாதாள உலகக் கும்பல் உறுப்பினர் கணேமுல்ல சஞ்சீவவின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட துப்பாக்கிதாரி, கடந்த ஆண்டு டிசெம்பரில் கந்தானையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட துப்பாக்கிதாரி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

2024 டிசெம்பர் 13 அன்று கந்தானையில் உள்ள ஒரு வீட்டில் சமிந்து தில்ஷான் பியூமாங்க கந்தானாராச்சி துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு அப்பகுதியை விட்டு தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளில், வெளிநாட்டில் வசிக்கும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியின் வழிகாட்டலின் கீழ் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது தெரியவந்துள்ளது. கொழும்பு குற்றப்பிரிவு சந்தேக நபரை 90 நாள் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் விசாரித்த பின் னர் இந்த தகவல் வெளிச்சத்துக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுத்தோட்ட செய்கையாளர்களுக்கு மரக்கன்றுகள், விதைகள் வழங்கல்



கல்முனை, மார்ச்.05

அம்பாறை மாவட்டம் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் சுற்றாடல் கழக முன்னோடி மாணவி ஜே. சதுஷயன்யா 2016 ஆம் ஆண்டு தொடக்கம் சுற்றுச் சூழல் தொடர்பாக பச்சை, மஞ்சள், வெள்ளி, தங்கப் பதக்க செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார். இவர் தற்போது ஜனாதிபதி பதக்க செயல்பாடுகளின் பொருட்டு தனியாள் கருத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்.

இதற்கமைய கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பாண்டிருப்பு 01 பி கிராம உத்தியோகத்தர் பிரிவில் வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுபவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் அவர்களை இனம்கண்டு அவர்களுக்கான மரக்கன்றுகள் மற்றும் விதைகள் என்பன வழங்கப்பட்டன.

இதில், முதற்கட்டமாக குறித்த பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கு மரக்கறி கன்றுகள், பழமரக் கன்றுகள் மற்றும் விதைகள் என்பன நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

மேலும், இக்குடும்பங்களுக்கு வீட்டுத் தோட்ட செய்கை தொடர்பாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட விவசாய போதனாசிரியர் எம். கோகுலராஜ் வளவாளராக கலந்து கொண்டு விளக்கமளித்ததுடன், குறித்த மாணவியால் வீட்டுத் தோட்ட செய்கை தொடர்பான கையேடும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி. ஜே. அதிசயராஜ், அம்பாறை மாவட்ட சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் புஸ்பராஜினி உள்ளிட்ட விவசாய திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(எ)

# மக்களுக்கு சேவை வழங்குவதில் கிழக்கு மாகாண சபை அசமந்தம்

## இம்ரான் எம்.பி. குற்றச்சாட்டு



திருகோணமலை, மார்ச்.05

**"அநுர அரசாங்க காலத்திலும் பொதுமக்களுக்கு சேவை வழங்குவதில் கிழக்கு மாகாண சபை அசமந்த போக்கிலேயே பயணித்து வருகின்றது"- இவ்வாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

திருகோணமலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

"கிழக்கு மாகாண சபை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு பொதுமக்களால் அனுப்பப்படும் கடிதங்களில் பெரும்பாலானவற்றுக்குப் பதில் அனுப்பப் படுவதில்லை. அவற்றுக்கான நடவடிக்கைகளும் கூட வாரக்கணக்கில், மாதக் கணக்கில் எனத் தாமதப்படுத்தப்படுகின்றன. சில விடயங்கள் எந்தவித நடவடிக்கையுமின்றி கிடப்பில் போடப்படுகின்றன.

கடந்த அரசாங்க காலத்தில் கிழக்கு மாகாண சபை எப்படி செயல்பட்டதோ அதே பாணியிலேயே இன்றும் பயணிக்கிறது. இந்த அரசாங்கம் அரச சேவையை வினைத்திறனுள்ள தாக்குவோம், பொதுமக்களுக்கு பயனுள்ள தாக்குவோம் என்று பேசிக் கொண்டாலும் எந்த மாற்றத்தையும் கிழக்கு மாகாண சபையில் அவதானிக்க முடியவில்லை.

மக்கள் பிரதிநிதியாகிய நான் கிழக்கு மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்களுக்கு பொதுமக்களது பிரச்னைகள் தொடர்பாக கடிதங்கள் அனுப்பியுள்ளேன். சில அலுவலகங்களுக்கு நேரில் சென்று விளக்கமளித்து கடிதங்கள் கையளித்துள்ளேன். எனது கடிதங்களுக்கே பதில் கிடைப்பதில்லை.

அப்படியாயின் பொது மக்கள் அனுப்பும் கடிதங்களின் நிலையை எண் ணிப் பார்க்க வேண்டியுள்ளது.

இதைவிட ஆச்சரியம் என்னவென்றால் கிழக்கு மாகாண ஆளுநருக்கு பொதுமக்கள் முன்வைக்கும் பிரச்னைகளை அவர் சம்பந்தப்பட்ட அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு நடவடிக்கைக்காக அனுப்புகிறார். அவைகூட கிடப்பில் போடப்படுகின்றன.

ஆளுநரின் கவனத்துக்கு சில விடயங்களை நான் முன்வைத்தேன். அவர் குறித்த அமைச்சுக்கள், திணைக்களங்களுக்கு அவற்றை முன்னிலைப்படுத்தி தேவையான நடவடிக்கை எடுத்து இருவாரங்களுக்குள் பதில் அனுப்புமாறு குறிப்பிட்டு கடிதம் அனுப்பியுள்ளார்.

அதன் பிரதி எனக்கும் கிடைத்தது. ஆனால், 2 மாதங்களாகியும் அவற்றுக்கான பதில் எனக்கு கிடைக்கவில்லை. உரிய விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுத்ததாகவும் தெரியவில்லை.

ஆளுநரின் கடிதத்தையே இந்த அதிகாரிகள் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், கிழக்கு மாகாண அரச அலுவலகங்களின் நிலையை எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. இது குறித்த நான் மிகவும் கவலையடைகின்றேன்"- என்றார்.(எ)

# வெளிநாட்டு வேலையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு

காரைதீவு,மார்ச்.05

மனித அபிவிருத்தி தாபனம் அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு, நிந்தவூர், கல்முனை, கல்முனை உப பிரதேச செயலகங்களுடன் இணைந்து பாதுகாப்பான புலம்பெயர் தொழில் (வெளிநாட்டு வேலை) தொடர்பான விழிப்புணர்வு செயல்திட்டம் ஒன்றை செயல்படுத்தி வருகின்றது.

இந்தச் செயல்திட்டத்தின் முக்கிய செயல்பாடாக துறை சார்ந்த அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் அமைப்புப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய கலந்துரையாடலை மேற்கொண்டு இலங்கையிலிருந்து புலம்பெயர் தொழிலாளர்களாக செல்பவர்கள் பாதுகாப்பாக செல்வதற்கு விதிமுறைகளைப் பின்பற்றி செல்ல ஊக்கப்படுத்தல் மற்றும் அதில் காணப்படும் நடைமுறை பிரச்னைகளை நிவர்த்தி செய்வதற்கான புதிய சட்ட திருத்தங்களை மேற்கொள்ளவதற்கான பரிந்துரைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

மனித அபிவிருத்தி தாபன உதவி இணைப்பாளர் எம். ஐ. றியாழ் தலைமையில் காரைதீவு லேடி லங்கா மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வளவாளராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ. சி. ஏ. அஸீஸ், ஆய்வு வழிநடத்துநராக தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அனுசியா சேனாதிராஜாவும் கலந்து கொண்டனர்.

(எ)

மட்டக்களப்பில் வெறிச்செயல்

# கத்திக்குத்து சம்பவத்தில் காயமடைந்தவர் மரணம்!



மட்டக்களப்பு, மார்ச்.05

மட்டக்களப்பு கல்லடி பிரதான வீதியில் கிராம அபிவிருத்தி வங்கிக்கு முன்பு நேற்று முன்தினம் இரவு 10 பேர் கொண்ட குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட

கத்திக்குத்து சம்பவத்தில் படுகாயமடைந்தவர் உயிரிழந்தார்.


வாழைச்சேனையைச் சேர்ந்த டிலோஜன் (வயது - 33) என்பவரே படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர் பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# கந்தளாய் சீனி தொழிற்சாலை காணி மக்களிடம் கையளிப்பு

திருகோணமலை, மார்ச்.05

திருகோணமலை மாவட்டம் கந்தளாய் சீனித் தொழிற்சாலையில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள தற்காலிக காணி ஒதுக்கீடு மக்களுக்காக வழங்கப்பட்டன.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் திட்டத்தின் பிரகாரம், கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமான விவசாய நிலத்தை தற்காலிகமாக அப்பகுதி மக்களுக்கு பயிர்ச்செய்கைக்காக வழங்கும் நிகழ்வு கடந்த முதலாம் திகதி கந்தளாய் நகர மண்டபத்தில் நடைபெற்றது.



கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர, வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, திருகோணமலை மாவட்ட செயலாளர் டபிள்யூ. ஜி.எம். ஹேமந்த குமார ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அனுமதிப் பத்திரங்களை வழங்கினர்.

குறித்த தொழிற்சாலை பல வருட காலமாக செயலிழந்து காணப்பட்டமையால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

# சாய்ந்தமருதில் நோன்புக்கஞ்சி தயாரிக்கும் இடத்தில் சோதனை

சாய்ந்தமருது, மார்ச்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பள்ளிவாசல்களில் விசேடமாக ரமழான் காலத்தில் வழங்கப்படும் நோன்புக் கஞ்சி நேற்று முன்தினம் திடீர் சுகாதார பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதனின் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்களான ஏ. எல். எம். அஸ்லம், ஏ. வாசித் அஹமட் மற்றும் டெங்கு களத்தடுப்புப் பணியாளர்கள் முதலானோர் இதில் கொண்டனர்.

இதன்போது, நோன்புக் கஞ்சி தயாரித்தல், விநியோகித்தல் என்பனவற்றில் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டியதன் அவசியம் பற்றித் தெளிவூட்டப்பட்டதுடன் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் என்பனவற்றில் சூடான கஞ்சி விநியோகிப்பதனால் ஏற்படும் உடல் பாதிப்புகள் சம்பந்தமான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனுக்கு வழங்கி வந்த இராணுவ உதவி நிறுத்தம்!

## அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்டன், மார்ச்.05

**உக்ரைனுக்கு இதுவரை வழங்கி வந்த இராணுவ உதவிகளை நிறுத்துவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.**

உக்ரைன் நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ரஷ்யா, அந்த நாடு மீது கடந்த 2022ஆம் ஆண்டு போர் தொடுத்தது. ரஷ்யாவின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் தவித்த உக்ரைனுக்கு ஆயுத உதவியை செய்ய முன்வந்தார் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன். இந்த விவகாரத்தில் இந்தியாவின் உதவியையும் நாடினார் உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி.

இதனிடையே அமெரிக்காவின் ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்றார். ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால், ரஷ்யா - உக்ரைன் விவகாரத்தில் அமெரிக்காவின் நிலைப்பாட்டிலும் மாற்றம் ஏற்பட்டது. முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் கடைப்பிடித்து வந்த கொள்கையை அடியோடு மாற்றினார் ட்ரம்ப். ரஷ்யாவிடம் இழந்த பகுதிகளை மீட்டுத் தரமுடியாது, நேட்டோவில் உக்ரைனுக்கு இடம் வழங்க முடியாது என்று ட்ரம்ப் கூறி வருகிறார்.

மேலும், உக்ரைனுக்கு இதுவரை வழங்கி வந்த ஆதரவுக்கு பிரதிபலனாக அந்த நாட்டில் உள்ள அரிய வகை கனிம வளங்களை காலவரையறையின்றி வெட்டி எடுக்க அமெரிக்காவுக்கு அனுமதி வழங்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்று ட்ரம்ப் புதிய நிபந்தனையை விதித்தார். ஆனால், ஜெலன்ஸ்கி இதற்குப் பணிந்து கொடுக்கவில்லை. இதனால், வெள்ளை மாளிகையில் இருவருக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின் போது வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த நிலையில்தான், உக்ரைனுக்கு வழங்கி வந்த இராணுவ நிதி உதவிகளை நிறுத்துவதாக அமெரிக்கா நேற்று அறிவித்துள்ளது. போரை நிறுத்தும் நடவடிக்கையாக நிதி உதவி நிறுத்தப்பட்டிருப்பதாக வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் கூறினார். (எ)

# போர் நிறுத்தம் வெகு தொலைவில்

## ஜெலன்ஸ்கி தெரிவிப்பு

கீவ், மார்ச்.05

ரஷ்யா - உக்ரைன் இடையிலான போர் நிறுத்தம் வெகு தொலைவில் உள்ளது என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

இரு நாடுகள் இடையே நீடித்து வரும் போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுக்களின் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புடன் காரசார வாக்குவாதம் ஏற்பட்டதால் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி பாதியில் வெளியேறினார். இதையடுத்து அவருக்கு இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் கீவ் நகரில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் ஜெலன்ஸ்கி கூறுகையில், "அமெரிக்காவுடன் எங்களது நட்புறவு தொடரும் என்று நினைக்கிறேன். உக்ரைனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையிலான போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கான ஒப்பந்தம் இன்னும் மிக தொலைவில் உள்ளது"- என்றார். (எ)

# மியன்மாரில் நிலநடுக்கம்

நைபிடா, மார்ச்.05

மியன்மாரில் நேற்று முன்தினம் காலை 09. 03 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இது ரிக்டர் அளவுகோலில் 4. 2 ஆக பதிவாகியிருந்தது என தேசிய நில அதிர்வுமையம் தெரிவித்துள்ளது.

10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத் தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை. (எ)

# தனிமைச்சிறையில் இம்ரான்கான் கொலை செய்ய அரசு சதித்திட்டம்


## பாக். தெக்ரிக்-இ-இன்சப் கட்சி குற்றச்சாட்டு

லாகூர், மார்ச்.05

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் தனிமைச்சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக அவரது கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

பாகிஸ்தான் தெக்ரிக்-இ-இன்சப் கட்சி தலைவரான இம்ரான்கான், 2018 முதல் 2022 வரை பிரதமராக இருந்தார். பின்னர், எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் பிரதமர் பதவியை அவர் இழந்தார். மேலும், பாகிஸ்தானின் புதிய பிரதமராக ஷபாஸ் ஷெரீப் பொறுப்பேற்றார்.

இதனைத் தொடர்ந்து இம்ரான்கான் மீது ஊழல் முதல் பயங்கரவாதம் வரை பல்வேறு குற்றச்சாட்டுக்கள்



சுமத்தப்பட்டன. இந்த வழக்குகளில் 2023 ஒகஸ்ட் 5ஆம் திகதி கைது செய்யப்பட்ட இம்ரான்கான் ராவல் பிண்டியில் உள்ள அடிலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், இம்ரான் கான் தனிமைச்சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக அவரது கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

பயங்கரவாதிகளை அடைத்து வைக்கும் தனிமைச் சிறையில் அவர் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டு உயிரிழக்க வைக்க சதித்திட்டம் தீட்டப்படுவதாகவும் அந்தக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

சிறையில் உள்ள இம்ரான் கானை 6 பேர் சந்திக்கலாம் என நீதிமன்றம் அனுமதி வழங்கிய போதும், அவரைச் சந்திக்க சிறை அதிகாரிகள் அனுமதி மறுப்பதாகவும் பாகிஸ்தான் தெக்ரிக்-இ-இன்சப் கட்சி தெரிவித்துள்ளது. மேலும், இம்ரான்கானை சந்திக்க அவரது மனைவி புஷ்ரா பீபிக் கும் அனுமதி மறுக்கப்படுவ தாக தெரிவிக்கப்பட் டுள்ளது. (எ)

# அமெரிக்க நிறுவன விண்கலம் நிலவில் தரையிறங்கி சாதனை

வாஷிங்டன், மார்ச்.05

அமெரிக்காவின் புளூ கோஸ்ட் விண்கலம் வெற்றிகரமாக நிலவில் நேற்று முன்தினம் தரையிறங்கியுள்ளது.

விண்வெளி ஆராய்ச்சில் பல நாடுகள் ஆர்வம் காட்டி வருகின்றன. குறிப்பாக பூமியின் ஒரே துணைக்கோளான நிலவை ஆய்வு செய்யும் முயற்சி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதற்காக நிலவை சுற்றி வந்து ஆய்வு செய்வதற்காக விண்கலங்களை அனுப்பி வருகின்றன. ரஷ்யா, அமெரிக்கா, சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய 5 நாடுகள் மட்டுமே நிலவில் தரையிறங்கி பரிசோதனை செய்யும் முயற்சியில் வெற்றி பெற்றுள்ளன.

இதற்கிடையே தனியார் நிறுவனங்களும் நிலவில் இறங்கி பரிசோதனை செய்யும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இதில் அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தை சேர்ந்த "பயர்பிளை ஏரோஸ்பேஸ்" நிறுவனம் கடந்த ஜனவரி 15ஆம் திகதி விண்கலம் ஒன்றை அனுப்பியது. "புளூ கோஸ்ட்" என்ற இந்த விண்கலம் பிரபல தொழிலதிபர் எலான் மஸ்க்கின் "ஸ்பேஸ் எக்ஸ்" நிறுவனத்தின் ரொக்கெட் மூலம் நிலவுக்கு செலுத்தப்பட்டது. நிலவின் சுற்றுப்பாதையை அடைந்த இந்த விண்கலத்திலிருந்து லேண்டர் தனியாக பிரிந்து நேற்று முன்தினம் நிலவின் மேற்பரப்பில் தரையிறங்கியது. நிலவின் வடகிழக்கு விளிம்பில் உள்ள பழங்கால எரிமலை குவிமாடத்தின் சரிவில் தரையிறங்கியது.தனியார் நிறுவனம் ஒன்று நிலவில் வெற்றிகரமாக விண்கலத்தை தரையிறக்கியது இதுவே முதல் முறையாகும். (எ)

# பங்களாதேஷுக்கு வேறு வழியில்லை

## தலைமை ஆலோசகர் யூனுஸ்

டாக்கா, மார்ச்.05

இந்தியாவுடன் நல்லுறவு பேணுவதைத் தவிர பங்களாதேஷுக்கு வேறு வழியில்லை என்று அந்த நாட்டின் இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸ் தெரிவித்துள்ளார்.



பங்களாதேஷ் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனாவின் ஆட்சி கவிழ்ந்த பிறகு அந்த நாடு பெரும் பிரச்னையை எதிர்கொண்டு வருகிறது. தற்போது அங்கு இடைக்கால அரசு நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், முகமது யூனுஸ் பி.பி.சி. நிறுவனத்துக்கு வழங்கிய நேர்காணலில் கூறியவை வருமாறு,

" இந்தியா, பங்களாதேஷ் நாடுகளுக்கு இடையேயான உறவு மிகவும் சிறந்த முறையில் உள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு எப்போதும் மிகச்சிறந்த வகையில் அமைந்திருக்கிறது. இது எதிர்காலத்திலும் தொடரும். இந்தியாவுடன் நல்லுறவு வைப்பதைத் தவிர பங்களாதேஷுக்கு வேறு வழியில்லை இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மிகவும் நெருக்கமானது. இரு நாடுகளும் ஒருவரையொருவர் மிகவும் சார்ந்து இருக்கிறோம். வரலாற்று ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் நாங்கள் மிகவும் நெருக்கமாக இருப்பதால், எங்களை தனிமைப்படுத்த முடியாது.

இருப்பினும், இரு நாடுகளிடையே சில மோதல்கள் எழுந்துள்ளன. தவறான பிரசாரம் காரணமாக இந்த மோதல்கள் எழுந்துள்ளன. இதன் விளைவாக, எங்களுக்கு இடையே ஒரு தவறான புரிதல் எழுந்துள்ளது. அந்தத் தவறான புரிதலை நாங்கள் சமாளிக்கவும், அதிலிருந்து மீண்டு வரவும் முயற்சித்து வருகிறோம்"- என்றார். (எ)

# 10 இலட்சம் தொன் தோரியம் சீனாவில் கண்டுபிடிப்பு

பீஜிங், மார்ச். 05

சீனாவின் உள்மங்கோலியா பகுதியில் 10 இலட்சம் தொன் தோரியம் தாது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், அந்த நாட்டில் 60, 000 ஆண்டுகளுக்கு தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்று சீன விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் வடக்குப் பகுதியில் உள்மங்கோலியா அமைந்துள்ளது. இது சீனாவின் தன்னாட்சி பெற்ற மாகாணமாகும். அங்குள்ள பையுன் ஓபா பகுதியில் அரிய வகை தாதுக்கள் காணப்படுகின்றன. அப்பகுதியில் தற்போது 5 மிகப்பெரிய சுரங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் இருந்து இரும்பு உட்பட 175 வகையான தாதுக்கள் வெட்டி எடுக்கப்படுகிறது.

பையுன் ஓபா பகுதியில் தோரியம் இருப்பு குறித்து சீன விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாக ஆய்வு நடத்தி வந்தனர். இந்த ஆய்வு அண்மையில் நிறைவு செய்யப்பட்டு சீன அரசிடம் விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பையுன் ஓபா பகுதியில் சுமார் 10 இலட்சம் தொன் தோரியம் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதன்மூலம் அந்த நாட்டில் 60, 000 ஆண்டுகளுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்று சீன விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# பிராக் மாஸ்டர்ஸ் செஸ்: இந்திய வீரர்கள் முதலிடம்

பிராக், மார்ச்.05

பிராக் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் 5 சுற்றுகள் முடிவில் இந்திய வீரர்கள் முதலிடம் பிடித்துள்ளனர்.

7ஆவது பிராக் மாஸ்டர்ஸ் சர்வதேச செஸ் போட்டி செக்குடியரசில் நடைபெற்று வருகிறது. 9 சுற்றுகள் கொண்ட இந்தப் போட்டியில் இந்தியாவின் பிரக்ஞானந்தா, அரவிந்த் சிதம்பரம் உட்பட 10 வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

இதன் 5ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் நேற்று இந்தியாவின் பிரக்ஞானந்தா சக நாட்டவரான அரவிந்த் சிதம்பரமுடன் மோதினார். இந்த ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இதுவரை 5 சுற்றுகள் முடிவடைந்த நிலையில் பிரக்ஞானந்தா, அரவிந்த் சிதம்பரம் தலா 3.5 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர்கின்றனர். நெதர்லாந்தின் அனிஷ் கிரி உட்பட 4 வீரர்கள் தலா 2.5 புள்ளிகளுடன் அடுத்த இடத்தில் உள்ளனர். (எ)



## எதிரணி எதுவாக இருந்தாலும் இந்திய அணி வெற்றி பெறும்

## கங்குலி நம்பிக்கை



மும்பை, மார்ச்.05

எதிரணி எதுவாக இருந்தாலும் இந்தியா வீழ்த்தும் என்று அந்த அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. இதன் லீக் சுற்று முடிவில் “ஏ“ பிரிவில் முதல் 2 இடங்களைப் பிடித்த இந்தியா, நியூசிலாந்து, “பி“ பிரிவில் தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

இந்த நிலையில் வெள்ளைப்பந்து கிரிக்கெட் (ரி-20 மற்றும் ஒருநாள்) ஆழமான திறமை கொண்டிருப்பதால் இந்திய அணி எந்த எதிரணியையும் வீழ்த்தி கிண்ணத்தை வெல்லுமென இந்திய முன்னாள் வீரர் கங்குலி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,“இந்தியா 2024 ரி - 20 உலகக் கிண்ணத்தை வென்றது. மேலும் கடந்த ஒருநாள் உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் விளையாடியது. வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் எதிரணி யாராக இருந்தாலும் இந்தியா மிகவும் வலுவானது. யாரை வேண்டுமானாலும் வீழ்த்தும் திறமை இந்தியாவிடம் உள்ளது”- என்றார். (எ)

# ஜன்னிக் சின்னெர் முதலிடத்தில் நீடிப்பு



நியூயோர்க், மார்ச்.05


ரென்னிஸ் தரவரிசையில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஜன்னிக் சின்னெர் முதலிடத்தில் நீடிக்கிறார்.

ரென்னிஸ் வீரர், வீராங்கனைகளின் புதிய தரவரிசை பட்டியலை சர்வதேச ரென்னிஸ் சங்கம் நேற்று முன்தினம் வெளியிட்டது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கி 3 மாத காலம் தடையை அனுபவித்து வரும் இத்தாலி வீரர் ஜன்னிக் சினெர் முதலிடத்தில் நீடிக்கிறார். 2ஆவது இடத்தில் ஜேர்மனியின் அலெக்ஸ்சாண்டர் ஸ்வெரேவும், 3ஆவது இடத்தில் ஸ்பெயினின் அல்காரஸூம் உள்ளனர். முன்னாள் நம்பர் 1 வீரரான ஜோகோவிச் 7ஆவது இடத்தில் தொடருகிறார். டுபாய் ஓபின் ரென்னிஸில் சம்பியன் பட்டம் வென்ற சிட்சிபாஸ் (கிரீஸ்) இரு இடம் உயர்ந்து அவர் 9ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

இரட்டையர் தரவரிசையில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா ஓர் இடம் முன்னேறி 21ஆவது இடத்திலும், யுகி பாம்ப்ரி 5 இடங்கள் முன்னேறி 39ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் பெரியளவில் மாற்றமில்லை. பெலாரஸின் அரினா சபலெங்கா முதலிடத்திலும், போலந்தின் ஸ்வியாடெக் 2ஆவது இடத்திலும், அமெரிக்காவின் கோகோ காப் 3ஆவது இடத்திலும் நீடிக்கின்றனர். (எ)

# “டுபாய் இந்திய அணியின் சொந்த மைதானம் இல்லை”



டுபாய், மார்ச்.05

“டுபாய் இந்திய அணியின் சொந்த மைதானம் இல்லை” என்று ரோஹித் சர்மா தெரிவித்தார்.

ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் கிரிக்கெட் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் நேற்று மோதின. இதையொட்டி நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா கூறுகையில்,“ அவுஸ்திரேலியா மிகவும் வலிமையான எதிரணி. நாங்கள் செய்ய வேண்டியது எல்லாம் ஒன்று மட்டுமே. கடைசி மூன்று போட்டிகளில் எப்படி விளையாடி னோமோ அதே போலவே அரையிறுதி ஆட்டத்திலும் விளையாட வேண்டும். அவுஸ்திரேலிய அணி எப்படி விளையாடுவார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஆட்டத்தின் நடுவே சில பதற்றமான சூழல்களும் இருக்கும். இன்றைய காலக்கட்டத்தில் போட்டிகள் அவ்வாறுதான் இருக்கின்றன. கண்டிப்பாக அழுத்தம் என்பது இரண்டு அணிகளுக்குமே இருக்கும்

ஓர் அணியாக, ஒரு வீரராக, துடுப்பாட்ட குழுவாக, பந்து வீச்சு குழுவாக நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதில் கவனம் செலுத்துகிறோம். இது எங்களுக்கு அதிகம் உதவியாகவுள்ளது. அவுஸ்திரேலிய அணி பல ஆண்டுகளாக சிறந்து விளங்குகிறது. இதனால் அவர்கள் போராடுவார்கள் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்”- என்றார். (எ)

# “அடித்து நொறுக்க திட்டங்கள் வகுப்பு”



டுபாய், மார்ச். 05

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர்களை அடித்து நொறுக்க திட்டங்களை வகுக்க வேண்டும் என்று ஸ்டீவ் சுமித் தெரிவித்தார்.நடப்பு சம்பியன்ஸ் கிண்ணத்தின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் நேற்று மோதின.

9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகிறது. பாதுகாப்பு காரணங்களுக்காக இந்திய அணி பாகிஸ்தானுக்கு செல்ல மறுத்ததால் இந்திய அணிக் குரிய ஆட்டங்கள் மட்டும் டுபாயில் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், நேற்று டுபாயில் நடைபெற்ற அரையிறுதி போட்டிக்கு முன் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்டீவ் சுமித் கூறுகையில்,

“டுபாயில் மட்டும் விளையாடுவது இந்தியாவுக்கு சாதகமாக இருக்குமா? என்பது எனக்குத் தெரியவில்லை. அனைத்துப் போட்டிகளையும் அவர்கள் இங்கே விளையாடியதால் ஆடுகளம் எப்படி இருக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும். இந்தியா தங்களது அனைத்துப் போட்டிகளையும் நன்றாக விளையாடியது. எனவே, நல்ல ஆட்டத்தை எதிர்நோக்கியுள்ளோம். நாங்கள் ஆடுகளத்தை நன்றாக கணித்துள்ளோம்.

ஆனால், எங்களுக்கு இங்குள்ள சூழ்நிலைகளுக்கு தகுந்தாற்போல் உட்படுத்தும் வாய்ப்பு கிடைக்கவில்லை. வருண் சக்கரவர்த்தி மட்டுமல்ல இந்தியாவின் மற்ற சுழற்பந்து வீச்சாளர்களும் தரம் நிறைந்தவர்கள் என்று நினைக்கிறேன். எங்களை பொறுத்த வரை சுழற்பந்து வீச்சாளர்களை இடைநிலை ஓவர்களில் எப்படி எதிர்கொள்கிறோம் என்பதைப் பொறுத்துத் தான் வெற்றி தோல்வியிருக்கும். இது நல்ல சவாலாக இருக்கும். இந்த ஆடுகளத்தில் சுழல் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். நாங்கள் அதை அடித்து நொறுக்க திட்டங்களை வகுக்க வேண்டும்”- என்றார். (எ)

# கொல்கத்தா அணியின் தலைவராக ரஹானே

கொல்கத்தா, மார்ச்.05

கொல்கத்தா அணித் தலைவராக அஜிங்யா ரஹானே நியமிக்கப்பட்டுள்ளார்.

10 அணிகள் கலந்து கொள்ளவுள்ள 18ஆவது ஐ. பி. எல். தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி இந்தியாவின் கொல்கத்தாவில் தொடங்குகிறது.

இந்தத் தொடரின் முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருவை எதிர்கொள்கிறது.

இதில் பங்கேற்கும் 10 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், கொல்கத்தா அணித் தலைவராக அஜிங்யா ரஹானேவை நியமித்து கொல்கத்தா நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

மேலும், கொல்கத்தா அணியின் துணைத் தலைவராக வெங்கடேஷ் ஐயர் நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான அறிவிப்பை கொல்கத்தா அணியின்



தலைமை நிர்வாக அதிகாரி வெங்கி மைசூர் வெளி யிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டணியுடன்...

நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஊடக சந்திப் பின்போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமது கூட்டணியில் தமிழரசுக் கட்சி சேரலாம் எனச் சொன்னார்கள். நாங்கள் ஒற்றுமை கருதி பேசாது இருந்தோம். அதற்காக தமிழரசுக் கட்சியை மலினப்படுத்தி கீழ்நிலைப்படுத்த எவராலும் முடியாது

கூட்டணியுடன் கூட்டு வைக்க வேண்டிய தேவை தமிழரசுக்கு இல்லை. நாம் கூட்டமைப்பாக செயற்படவே விரும்பினோம். அதற்காக நாம் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர்களுடன் பேசி இருக்கிறோம்

அதேபோன்று, புளொட் அமைப்பில் இருந்தாலும் சித்தார்த்தன் தமிழரசுக் கட்சிக்காரன். அவரின் பூர்வீகம் தமிழரசுக் கட்சியே, அவரிடம் நேரடியாகவே சொல்லி இருக்கிறேன். நீங்கள் கட்சியின் நலன் சார்ந்து சிந்திக்கவேண்டும் என்று.

கூட்டமைப்பாகச் செயற்பட நாம் தயார். ஆனால் கட்சிகளின் கூட்டணிகளுக்குள் நாம் செல்ல தயார் இல்லை - என்றார். (அ)

## நல்லிணக்கத்தை...

தேர்தலில் பரந்துபட்ட மக்கள் ஆணையைப் பெற்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சி பீட மேறியதாக வும், புதிதாகத் தெரிவான பாராளுமன்றத்தில் ஆற்றிய கொள்கைப்பிரகடன உரையில் நாட்டில் நீண்ட காலமாக நிலவும் பிரிவினைகளைக் களைந்து, இனங்களுக்கு இடையில் தேசிய ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதை இலக்காகக்கொண்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றத் தயாராக இருப்பதாக உறுதியளித்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை முன்னெடுத்து, நீதியை நிலைநாட்டுவதாக ஜனாதிபதியினால் அளிக்கப்பட்ட வாக்குறுதி குறித்து வரவேற்பு வெளியிடப்பட்டதுடன், இலங்கையில் இடம்பெற்ற கடந்த கால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்கவேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

அதேவேளை உண்மை மற்றும் நீதிக்காக நீண்டகாலமாகப் போராடிவரும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டதுடன், அவர்களுக்கான தீர்வை வழங்கக்கூடியவகையில் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் செயற்திறனான முறையில் இயங்க வேண்டியது அவசியம் என வலியுறுத் தப்பட்டது.

அத்தோடு பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் நிகழ்நிலைக் காப்புச் சட்டம் உள்ளிட்ட சட்டங்கள் உரிய நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்கப்படவேண்டும் எனவும், வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சிவில் செயற்பாட்டாளர்கள் மீதான கண் காணிப்புக்கள் தொடர்வதாகத் தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றி ருக்கும் நிலையில், அவை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, சிவில் சமூக செயற்பாடுகளுக்கான இடை வெளி உறுதிப்படுத்தப்படவேண்டும் எனவும் கோரப்பட்டது.

மேலும் நீண்ட காலமாக நிலவிவரும் தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும், இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் இதுவே சரியான தருணம் எனச் சுட்டிக்காட்டப்பட்டதுடன், அரசாங்கத்தினால் பிரேரிக்கப் பட்டுள்ள உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு செயன்முறை குறித்து வரவேற்பு வெளியிடப்பட்டது. (அ)

## ஏப்ரலில்...

பகுதியில் ஜனாதிபதி அனுர குமார திஸநாயக்க, பிரதமர் உட்பட்டோரைச் சந்திக்கவுள்ளார். மேலும், சம்பூரில் மின் திட்டமொன்றையும் அவர் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அனுராதபுரம் ஸ்ரீ மகாபோதிக்கு சென்று அங்கு அவர் வழிபாடுகளிலும் ஈடுபடவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமரின் வருகையையொட்டி நாட்டில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், இதற்காக இந்தியாவில் இருந்து உயர்மட்ட பாதுகாப்பு குழு வொன்று நாட்டுக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அநுரகுமார திஸாநாயக்க முதல் வெளிநாட்டுப் பயணமாக கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் இந்தியா சென்றிருந்தார்.

இதன்போது பிரதமர் மோடி உள்ளிட்ட உயர் மட்ட தலைவர்களைச் சந்தித்திருந்த ஜனாதிபதி அநுரகுமார, பிரதமர் மோடியை இலங்கை வருமாறு அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அரச...

அதன் செயலாளர் மருத்துவர் பிரபாத் சுகதபால தெரிவித்தார்.

இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அவர்களின் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இன்று முதல் நாடளாவிய வேலைநிறுத்தத்தில் ஈடுபட அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் முடிவு செய்துள்ளது.

"நாளை(இன்று) நடைபெறவிருந்த இந்த அடையாள வேலைநிறுத்தத்தை ஒத்திவைக்க முடிவு செய்தோம். மார்ச் 21 ஆம் திகதி மூன்றாவது பட்ஜெட் வாசிப்பு வரை போராட்டம் ஒத்திவைக்கப்படுகிறது.

"மருத்துவர்கள் கோரிய கூடுதல் பணிப் படியை அடிப்படைச் சம்பளத்தில் 1/80 இல் பராமரிக்கவும், விடுமுறை கொடுப்பனவை அடிப்படை சம்பளத்தில் 1/20 இல் அதே அளவில் பராமரிக்கவும் தேவையான நேர்மறையான தலையீடுகளைச் செய்ய சுகாதார அமைச்சர் ஒப்புக்கொண்டார் - என அவர் தெரிவித்தார். (அ)

## சுயாதீன...

பிரிவின் இயக்குநர் மாரிட் கோஹோனென் ஷெரிப் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு இறுதியில் நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களைத் தொடர்ந்து தற்போதைய தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் பெரும்பான்மை யைப் பெற்றுள்ளது.

மனித உரிமைகளில் அர்த்தமுள்ள முன்னேற்றத்தை அடைவதற்கும், சமூகங்களுக்கு இடையேயான பிளவுகளைத் தீர்ப்பதற்கும், அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள முக்கியமான வாய்ப்பு இதுவாகும் எனவும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

புதிய ஜனாதிபதி பாராளுமன்றத்தில் தனது ஆரம்ப உரையில், பல தசாப்த காலமாக இனங்களுக்கு இடையேயான பிளவு மற்றும் இனவெறியால் ஏற்பட்ட தீங்குகளை ஏற்றுக்கொண்டதாகவும், ஊழல்களுக்கு எதிராகச் செயல்படுவது மற்றும் ஏப்ரல் 21 தாக்குதல்கள் மற்றும் பிற குறிப்பிடத்தக்க நிகழ்வுகளுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்வதுடன் நீண்டகாலமாக மனித உரிமைகள் விடயத்தினை நிவர்த்தி செய்வதற்கும் உறுதியளித்துள்ளார் எனவும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

உள்நாட்டு மோதல்களின்போதும், அதற்கு முந்திய கிளர்ச்சிகளின்போதும், நடந்த பாரிய மனித உரிமை மீறல்களுக்கு, தற்போது வழங்கப்பட்ட உறுதிமொழிகள் பேணப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

## சீர்திருத்தங்களை...

தெரிவித்தார்.

இதேவேளை, அனைத்து கடினமான மாற்றங்களும் கடந்த இரு ஆண்டுகளில் நடந்துவிட்டதாகச் சுட்டிக்காட்டிய அவர், சீர்திருத்தங்களைக் கடைப்பிடிப்பது எதிர்காலத்தை மிகவும் எளிதாக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (அ)

## சித்துப்பாத்தி...

ஆக்கப்பட்டோர் சங்கத்தின் சார்பில் சட்டத்தரணி தற்பரனும் கலந்துகொண்டனர். இதன்போது, வெறுமனே பொலிஸாரை மாத்திரம் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தாமல், சித்துப்பாத்தி இந்து மயானத்தின் அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்களையும் பாதுகாப்புப் பணிகளில் உள்வாங்குகின்றபோது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்ற விடயம் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. இந்தக் கோரிக்கையை ஏற்று சித்துப்பாத்தி இந்து மயானத்தின் அபிவிருத்தி சங்கத்தின் ஐந்து உறுப்பினர்களின் பெயர் விவரங்களை வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வழக்கு தொடர் விசாரணைகளுக்காக திகதியிடப்பட்டது. (அ-05)

## நல்லிணக்க...

மொன்டிநீக்ரோ, வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் தமது அறிக்கையில் இவ்வாறு வலியுறுத்தியுள்ளன.

அந்த அறிக்கையில்-

இலங்கையில் கடந்த வருடம் தேர்தல்கள் அமைதியான முறையில் இடம்பெற்றதையும் அமைதியான ஆட்சி மாற்றத்தையும் நாங்கள் வரவேற்கின்றோம்.

புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பையேற்று நான்கு மாதங்களே ஆகின்றன என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். இலங்கை இந்த மாற்றத்தை பயன்படுத்தி தான் எதிர்கொண்டுள்ள சவால்களுக்கு தீர்வை காணமுயல வேண்டும் என நாங்கள் ஊக்குவிக் கின்றோம்.

நல்லிணக்க விடயங்கள் அர்த்த பூர்வமான முன்னேற்றத்தை ஏற்படுத்துவது குறித்த அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும் நிலங்களை மீள கையளிப்பது, வீதித்தடைகளை அகற்றுவது, வடக்கு-கிழக்கில் உள்ள மக்கள் தங்கள் அன்புக்குரியவர்களை கடந்தகாலங்களை நினைவுகூர அனுமதிப்பது ஆகிய ஆரம்ப கட்ட நடவடிக்கைகளையும் நாங்கள் வரவேற்கின்றோம்.

நம்பிக்கையை கட்டியெழுப்பி அது தொடர்ந்தும் நீடிக்கச் செய்வதற்கு சிவில் சமூகத்தினருக்கான தளத்தை பாதுகாப்பது அவசியம், சிவில் சமூக செயற்பாட்டாளர்களை கண்காணிப்பது துன்புறுத்துவது போன்ற நடவடிக்கை களை நிறுத்தவேண்டும்.

இலங்கையின் அரசமைப்பின் அடிப்படையில் அதிகாரங்களை பகிர்வதற்கான ஆட்சி முறை சீர்திருத்தங்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை நாங்கள் வரவேற்கின்றோம்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றீடு செய்வது குறித்த தனது நோக்கத்தை அரசாங்கம் வெளியிட்டுள்ளதை நாங்கள் கருத்தில் கொண்டுள்ளோம்.

புதிய சட்டம் சர்வதேச தராதரங்களிற்கு ஏற்றவிதத்தில் காணப்படவேண்டும் என நாங்கள் மீளவலியுறுத்துகின்றோம்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

ஊழல் ஒழிப்பு மற்றும் மனித உரிமை விவகாரங்களில் முன்னேற்றத்தை காண்பதற்கு அரசாங்கம் முயலும் தருணத்தில் எந்தவொரு முழுமையான நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகளும்இபாதிக்கப்பட்ட மக்களின் ஆதரவை பெற்றதாக கடந்தகால பரிந்துரைகளின் மேல் கட்டியெழுப்பப்பட்டதாக சர்வதேச தராதரத்தினை பூர்த்தி செய்வதாக காணப்படவேண்டும் என நாங்கள் வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது. (அ)

## எமக்கெதிரான...

சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தல் நடத்துதல் மற்றும் அதன் பின்னர் நமது பல தசாப்த கால ஜனநாயக நடை முறைக்கு ஏற்ப கண்ணியமான மாற் றம் என்ற மாதிரியின்படி, கடந்த ஆண்டு செப்ரெம்பரில் இலங்கை யின் ஒன்பதாவது நிறைவேற்றுத் தலைவராக அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்றார்.

அதைத் தொடர்ந்து 2024 நவம்பரில் புதிய பாராளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இதன் மூலம் இலங்கையில் ஒரு புதிய அரசியல் கலாசாரம் மற்றும் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அரசாங்கம் வலுவான ஆணையுடன் முன்னேற முடிந்தது.

கடந்த வாரம் இந்த சபையில் உரையாற்றிய இலங்கையின் வெளியுறவு அமைச்சர், வடக்கு, கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கைச் சேர்ந்த மக்களின் கூட்டு விருப்பத்தின் மூலம் கட்டமைக்கப்பட்ட ஒரு அரசாங்கத்துடன், இலங்கை ஒரு புதிய பாதையில் பயணித்துள்ளது என்பதை எடுத்துரைத்தார்.

பன்முகத்தன்மையை மதிக்கும், இனம், மதம், வர்க்கம் மற்றும் சாதி அடிப்படையிலான அனைத்து பிளவுகளையும் அகற்றுவதற்கும், நம் நாட்டில் இனவெறி அல்லது மத தீவிரவாதம் மீண்டும் எழுவதை அனுமதிப்பதற்கும் பாடுபடுவோருக்கு எதிரான ஒரு ஒருங்கிணைந்த இலங்கை தேசத்திற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை அவர் எடுத்துரைத்தார்.

அரசாங்கம் பொருளாதார வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்துள்ளது. இது அனைத்து குடிமக்களும் பொருளாதார வாய்ப்புகளை மேம்படுத்தி, அதன் விளைவாக ஏற்படும் பலன்களை சமூகத்தின் அனைத்து அடுக்குகளும் நியாயமாகப் பெற அனுமதிக்கும் வகையில் நடைபெறும்.

நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் மக்களின் சமூக நல்வாழ்வை உறுதி செய்வதற்காக சட்டத்தின் ஆட்சி, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் மேலோங்கும்.- என்றார். (அ)

## கச்சதீவு...

பக்தர்கள் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் மறை மாவட்ட குரு முதல்வர் ஜோசப்தாஸ் ஜெபரட்ணம், இராமேஸ்வரம் பங்குத்தந்தை அசோக் வினோவுக்கு அனுப்பிய அழைப்பிதழை ஏற்று, இராமேஸ்வரத்திலிருந்து கச்சதீவு திருவிழாவுக்குச் செல்ல 79 விசைப்படகுகள் மற்றும் 23 நாட்டுப் படகுகளில், 2,720 ஆண்கள், 652 பெண்கள், 56 ஆண் குழந்தைகளும், 36 பெண் குழந்தைகளும் என மொத்தம் 3,464 பேர் பெயர் பதிவு செய்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சாராத வெளி மாவட்ட, வெளி மாநில பக்தர்கள் தங்கள் ஊர்க் காவல் நிலையங்களில் தடையில்லா சான்று பெற்றிருக்க வேண்டும். அதுபோல மத்திய, மாநில அரசு பணியாளர்கள் திருவிழாவில் கலந்து கொள்ள தங்களின் அலுவலகத்தில் தடையில்லாச் சான்று பெற்றிருக்க வேண்டும். மார்ச் 14 அன்று மாலை 4 மணியளவில் கச்சதீவில் கொடியேற்றத்துடன் விழா ஆரம்பமாகும். தொடர்ந்து ஜெபமாலை மன்றாட்டு, இருநாட்டு மக்களும் சேர்ந்து தூக்கி வரும் சிலுவைப் பாதை நிகழ்ச்சி, நற்கருணை ஆராதனையும், இரவு அந்தோனியாரின் சொரூபம் வைக்கப்பட்ட தேர் பவனியும் நடைபெறுகிறது.

மார்ச் 15 அன்று காலை 7.30 மணியளவில் சிறப்பு திருப்பலியும், கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெறும். இதனை தொடர்ந்து கொடியிறக்கமும் நடைபெற்று விழா முடிவடையும்.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம் நடத்தும் திருக்குறள் தேர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 05

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை நடத்தும் திருவள்ளுவர் விழாவை யொட்டி யாழ். மாவட்டப் பாடசாலைகளில் உயர்தரத் தில் தமிழ்ப்பாடத்தைக் கற்கும் மாணவரிடையே திருக் குறள் தேர்வு மற்றும் வினாடிவினாப் போட்டி என்பன இடம்பெறவுள்ளன.

ஒரு பாடசாலை சார்ந்து ஐந்து பேர் கொண்ட ஓர் அணி பங்கேற்கலாம் என்றும் விரும்புவோர் அதிபர் ஊடாக பொதுச் செயலாளர், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், இல 28 குமாரசாமி வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் மேலதிக விவரங்களுக்கு போட்டி இணைப்பாளர் யோ. நிவேதனுடன் 0779900031 என்ற எண்ணுடன் தொடர்புகொள்ளுமாறும் தமிழ்ச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

(அ)

# வரலாற்றில் மிக உயர்ந்த சம்பளத்தை தேசிய மக்கள் சக்தி அரசு வழங்கியது

### அமைச்சர் வசந்த சமரசிங்க பெருமிதம்

கொழும்பு, மார்ச் 05

**சமீபத்திய வரலாற்றில் மிக உயர்ந்த சம்பள உயர்வுகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வழங்கியதாகவும், பெரும்பான்மையான தொழிற் சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கம் இந்த நாட்டின் உழைக்கும் மக்களுக்கு அநீதி இழைக்க அனுமதிக்காது என்றும் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இருந்து 30,000 பேரை அரசு வேலைகளுக்கு நியமிக்க 10,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தனியார் துறை ஊழியர்களுக்கான குறைந்தபட்ச ஊதியமான 17,500 ரூபாயும் ஏப்ரல் முதல் 27,000 ரூபாவாக வழங்கப்படும். அடுத்த ஜனவரியில் வழங்கப்படும் 3,000 ரூபாயுடன் இது 30,000 ரூபாயாக அதிகரிக்கும்.

மேலும், தோட்டத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச சம்பளம் 1,350 ரூபாய். அவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது-என்றார்.

(அ)

# வேலையற்ற பட்டதாரிகள் கொழும்பில் போராட்டம்!

கொழும்பு, மார்ச் 05

அரசாங்க தொழில்வாய்ப்பை பெற்றுத்தருமாறு வலியுறுத்தி வேலையற்ற பட்டதாரிகள் பத்தரமுல்லையில் நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

பத்தரமுல்ல பாலத்துக்கு அருகில் போராட்டத்தை முன்னெடுத்த அவர்கள் பேரணியாக பாராளுமன்ற வீதிக்கு அருகில் வந்தனர். இதன்போது பாராளுமன்ற வீதியை இடைமறிக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொண்ட பொலிஸார், போராட்டத்துக்கு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தடை உத்தரவின் பிரதியை போராட்டக்காரர்களிடம் கையளித்தனர்.

அதன் பின்னர் அவ்விடத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.


இது தொடர்பில் ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் உறுப்பினர் கயந்தி சசிகலா ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்-

எமக்கு அரசாங்க தொழில்வாய்ப்பை பெற்றுத்தருமாறு கோரி தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். வரவு-செலவுத் திட்டத்துக்கு முன்னர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது எமக்கு தொழில் வாய்ப்பு தருவதாக உறுதியளித்தார்.

எனினும் 30 ஆயிரம் பேருக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்படும் என வரவு-செலவுத்திட்ட உரையின்போது தெரிவித்துள்ளார். அவை அனைத்து இளைஞர்-யுவதிகளுக்குமானதாகும்.

வேலையற்ற பட்டதாரிகள் 35ஆயிரம் பேருக்கு அதிகமாக இருக்கிறார்கள். ஆதலால் எமக்கு உரிய தீர்வு பெற்றுத்தரப்பட வேண்டும் என நாம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறோம்-என்றார்.

(அ)



## மோ.சைக்கிளில் பின்னால் இருந்த வயோதிப பெண் விழுந்து மரணம்!

யாழ்ப்பாணம், மார்ச் 05

மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்திருந்து பயணித்த வயோதிபப் பெண்ணொருவர் தவறி கீழ விழுந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். கோப்பாய் தெற்கு, கோப்பாய் பகுதியைச் சேர்ந்த சாம்பசிவம் தங்கம்மா (வயது 79) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மூதாட்டி கடந்த 17ஆம் திகதி தபால் நிலையத்தில் முதியோருக்கான கொடுப்பனவை எடுத்து விட்டு வீடு நோக்கி வந்துகொண்டிருந்தார். இதன் போது வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த பெண்ணொருவர் அவரை ஏற்றிக்கொண்டு வந்தார்.

இதன்போது திடீரென அந்த மூதாட்டி கீழே விழுந்து மயக்கமடைந்தார். பின்னர் கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

(அ-05)

# தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படக்கூடாது!

### சுகாதார அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 05

பொதுமக்களுக்கு துன்பத்தை ஏற்படுத்தும் விதமான நியாயமற்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக்கூடாது என சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சருமான வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இருந்து கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டதால் மார்ச் 5 ஆம் திகதி நாடு தழுவிய வேலைநிறுத்தம் தொடங்கப்படும் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஊடகங்கள் மூலம் வெளியிட்ட அறிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக அவர் இக்கருத்தை முன்வைத்தார்.

தொழிற்சங்கப் போராட்டம் இல்லாமலேயே, இந்த அரசாங்கம் அனைத்து வைத்தியர்களுக்கும் குறிப்பிடத்தக்க சம்பள உயர்வை அமுல்படுத்தியுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

அதன்படி, இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வைத்தியர்களுக்கு அடிப்படை சம்பளம், விடுமுறை கொடுப்பனவுகள், கூடுதல் நேர கொடுப்பனவுகள் மற்றும் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.



மேலும், சுகாதார அமைச்சின் வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி விவாதிக்கப்படும் நேரத்தில் இதுபோன்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதுபோன்ற நியாயமற்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக் கூடாது என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

(அ)

# 2023-2024 ஆண்டுகளில் 683 சிறுவர்கள் வீட்டு பணிக்கு வெளிநாடு சென்றனர்!

கொழும்பு, மார்ச் 05

இலங்கையில் 2023ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் 2024ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் 683 சிறுவர்கள் வீட்டுப் பணிக்காக வெளிநாடு சென்றுள்ளனர் என கோப் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி, ஒழுங்குமுறை நோக்கங்களுக்காக நிறுவப்பட்ட இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம், ஒரு வணிக வடிவத்தில் செயல்பட்டுள்ளமை தெளிவாகியுள்ளதாக கோப் குழு வலியுறுத்தியது.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தற்போதைய செயல்திறனை ஆய்வு செய்வதற்காக கோப் குழு பாராளுமன்றத்தில் கூடிய போது இது குறித்து விவாதிக்கப் பட்டது.

28,165 வீட்டுப் பணியாளர்கள் குடியிருப்புப் பயிற்சி வழங்காமல் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட தால் மொத்தம் ரூ. 631,177,650 பயிற்சி வருமானத்தைப் பணியகம் இழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும், இந்த கவனக்குறைவான சூழ்நிலை காரணமாக, மே 2023 முதல் ஜூன் 2024 வரை 683 சிறார் கள் வீட்டு பணிக்காக வெளிநாடு சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org